# அத்தியாயம் II

# மாநில அரசின் நிதிகள்

# அத்தியாயம் II

# மாநில அரசின் நிதிகள்

இந்த அத்தியாயம், தமிழ்நாடு அரசின் நடப்பாண்டு (2022−23) நிதிநிலை குறித்த ஒரு விரிவான பார்வையை அளிக்கிறது. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் இருந்த ஒட்டுமொத்த போக்குகளை கருத்தில் கொண்டும், கடந்த ஆண்டின் (2021–22) நிதி நிலையோடு ஒப்பிட்டும், நடப்பாண்டில் நேர்ந்த மிக முக்கியமான மாறுதல்களை ஒரு பகுப்பாய்வும் செய்கிறது.

## 2.1 2021-22 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2022−23 ஆண்டின் நிதி நடவடிக்கைகளின் சுருக்கம்

**அட்டவணை 2.1** கடந்த ஆண்டோடு (2021−22) ஒப்பிட்ட வகையில் மாநில அரசின் நடப்பாண்டிற்கான (2022−23) நிதி நடவக்கைகளின் சுருக்கத்தை **அட்டவணை 2.1** வழங்குகிறது. 2018-2023 காலகட்டத்தில் நிதி குறியீடுகளின் போக்கை **இணைப்பு 2.1** காட்டுகிறது.

**அட்டவணை 2.1: 2021-22 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2022–23 ஆண்டின் நிதி செயல்பாடுகளின் சுருக்கம்**

(₹ *கோடியில்*)

| வரவுகள் | 2021-22 | 2022-23 | செலவுகள் | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| பிரிவு–அ: வருவாய் | | | | | |
| **வருவாய் வகை வரவுகள்** | **2,07,492.40** | **2,43,749.34** | **வருவாய் வகை செலவு** | **2,54,030.42** | **2,79,964.48** |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,22,866.29 | 1,50,222.75 | பொது பணிகள் | 84,893.54 | 99,096.70 |
| வரியில்லாத வருவாய் | 12,116.52 | 17,060.95 | சமூக பணிகள் | 88,749.10 | 88,967.59 |
| மத்திய அரசு வரிகள் / தீர்வைகளில் பங்கு | 37,458.62 | 38,731.24 | பொருளாதார பணிகள் | 60,898.32 | 71,974.59 |
| இந்திய அரசின் மானியங்கள் | 35,050.97 | 37,734.40 | உதவி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள் | 19,489.46 | 19,925.60 |
| பிரிவு–ஆ: மூலதன வகை மற்றும் பிற இனங்கள் | | | | | |
| பல்வகை மூலதன வகை வரவுகள் | 0.01 | 41.97 | **மூலதன செலவு** | **37,010.78** | **39,529.91** |
| | | | பொது பணிகள் | *780.21* | *1,040.98* |
| | | | சமூக பணிகள் | *14,984.96* | *14,323.77* |
| | | | பொருளாதார பணிகள் | *21,245.61* | *24,165.16* |
| மீள பெறப்பட்ட கடன்கள், முன்பணங்கள் | 5,354.77 | 1,078.10 | வழங்கப்பட்ட கடன்கள், முன்பணங்கள் | 3,640.52 | 7,260.82 |
| பொது கடன் வரவுகள் | 1,04,484.99 | 1,01,061.71 | திருப்பி செலுத்தப்பட்ட பொது கடன் | 1 9,737.24 | 27,104.39 |
| எதிர்பாராச் செலவு நிதி | -- | -- | எதிப்பாரா செலவு நிதி | -- | -- |
| பொது கணக்கு வரவுகள் | 3,98,156.68 | 4,79,342.00 | பொது கணக்கு செலவுகள் | 3,83,756.59 | 4,62,458.90 |
| துவக்க ரொக்க இருப்பு | 55,072.80 | 72,386.10 | இறுதி ரொக்க இருப்பு | 72,386.10 | 81,340.72 |
| **மொத்தம்** | **7,70,561.65** | **8,97,659.22** | **மொத்தம்** | **7,70,561.65** | **8,97,659.22** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்*)

அட்டவணை 2.2: 2021-22 உடன் ஒப்பிடுகையில் 2022–2023ல் முக்கிய நிதி தொகுப்பு இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள்

| | |
|---|---|
| வருவாய் வகை வரவுகள் | ✓ மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள் 17.47 விழுக்காடு அளவிற்கு உயர்ந்தது.<br>✓ மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 22.27 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ சொந்த வரியில்லாத வருவாய் 40.81 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு 3.40 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ இந்திய அரசின் உதவி மானியங்கள் 7.66 விழுக்காடு உயர்ந்தது. |
| வருவாய் வகை செலவு | ✓ வருவாய் வகை செலவுகள் 10.21 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 16.73 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ சமூக பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 0.25 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொருளாதார பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 18.19 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ உதவி மானியங்கள் மீதான செலவுகள் 2.24 விழுக்காடு உயர்ந்தது. |
| மூலதன வகை வரவுகள் | ✓ கடன் சார்ந்த மூலதன வகை வரவுகள் 3.28 விழுக்காடு குறைந்த்து.<br>✓ பல்வகை மூலதன வரவுகளில் ₹41.97 கோடி உயர்வு இருந்த போதிலும், ஒட்டு மொத்த கடன் அல்லாத மூலதன வகை வரவுகள் 79.08 விழுக்காடு குறைந்தது, |
| மூலதன வகை செலவு | ✓ மூலதன வகை செலவுகள் 6.81 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 33.42 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ சமூக பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 4.41 விழுக்காடு குறைந்தது.<br>✓ பொருளாதார பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 13.74 விழுக்காடு உயர்ந்தது. |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | ✓ கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்குதல் 99.44 விழுக்காடு உயர்ந்தது<br>✓ கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப் பெறுதல் 79.87 விழுக்காடு குறைந்தது. |
| பொது கடன் | ✓ கடன் சார்ந்த மூலதன வகை வரவுகள் 3.28 விழுக்காடு குறைந்த்து.<br>✓ பொது கடன் திரும்ப செலுத்துதல் 37.33 விழுக்காடு உயர்ந்தது. |
| பொது கணக்கு | ✓ பொது கணக்கு வரவுகள் 20.39 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது கணக்கு செலவுகள் 20.51 விழுக்காடு உயர்ந்தது. |
| ரொக்க இருப்பு | ✓ கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022-2023ல் ரொக்க இருப்பு ₹8,954.62 கோடி (12.37விழுக்காடு ) உயர்ந்தது |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022–23ல் நிகழ்ந்த முக்கிய மாற்றங்கள் பின்வரும் துணை பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

- மாநிலத்தின் வருவாய் வரவுகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.47 விழுக்காடு (₹36,257 கோடி) அளவிற்கு உயர்ந்தது. வருவாய் வகை வரவுகளில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) இழப்பீடான ₹16,215 கோடி உள்ளடங்கியுள்ளது.

- வருவாய் வகை செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹25,934 கோடி (10.21 விழுக்காடு) உயர்ந்தது. இவ்வுயர்வுக்கு, ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதியப் பலன்கள் (₹5,928 கோடி), பொது கல்விக்கான செலவுகள் (₹5,856 கோடி) மற்றும் சந்தை கடன்கள்

மீது கொடுக்கப்பட்ட கூடுதல் வட்டி கொடுப்புகள் (₹4,363 கோடி) ஆகியவை முக்கிய காரணங்களாகும்.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022-23ல் **மூலதனச் செலவு** 6.81 விழுக்காடு (₹2,519 கோடி) உயர்ந்தது. 2020−21 உடன் ஒப்பிடுகையில் 2021−22ல் 11.92 விழுக்காடு உயர்வு இருந்தது. முக்கியமாக, சாலை போக்குவரத்து (₹1,212.12 கோடி) மற்றும் சாலைகள் மற்றும் பாலங்கள் (₹1,028.63 கோடி), ஆகியவற்றின் கீழ் பெரும் உயர்வு இருந்தது. மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் (48 விழுக்காடு), சிவில் விமான போக்குவரத்து (65 விழுக்காடு), குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் (18 விழுக்காடு) போன்றவற்றின் வளர்ச்சி விகிதத்தில் கணிசமான சரிவு ஏற்பட்டுள்ளது.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் **பொதுக் கடன் வரவுகள் அதாவது கடன்கள்** ₹3,423 கோடி (3.28 விழுக்காடு) குறைந்தது.

- **கடன்கள் மற்றும் முன்பணங்களை மீளப்பெறுதல்** நடப்பாண்டில் ₹4,277 கோடி (79.87 விழுக்காடு) கணிசமாக குறைந்தது. இக்குறைவுக்கு, TANGEDCO[1]வின் கடனை UDAY திட்டத்தின் கீழ் உதவி மானியமாக, கணக்களவில் சரிகட்டுவதன் மூலம், மாற்றுவது முடிவடைந்தது முக்கிய காரணமாகும்.

- **கடன்கள் மற்றும் முன்பணங்கள்** வழங்குவது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ₹3,620 கோடி (99.44 விழுக்காடு) உயர்ந்தது. இதற்கு முக்கிய காரணம், நடப்பாண்டில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ₹4,542 கோடி பொதுத்துறை மற்றும் பிற நிறுவனங்களுக்கு வளர்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் ஆகும்.

- **பொது கணக்கு வரவுகள் மற்றும் செலவுகள்** முறையே ₹81,185 கோடி (20.39 விழுக்காடு) மற்றும் ₹78,702 கோடி (20.51 விழுக்காடு) உயர்ந்துள்ளது. பொது கணக்கின் கீழ் நிகர வரவுகள் முந்தைய ஆண்டைக்காட்டிலும் ₹2,483 கோடி உயர்ந்துள்ளது.

- மேற்கூறியவற்றின் நிகர விளைவாக, ஆண்டு முடிவில் இருந்த ரொக்க இருப்பு முந்தைய ஆண்டின் இருப்பைவிட ₹8,955 கோடி கூடுதலாக இருந்தது. ரொக்க இருப்பு 12.37 விழுக்காடு உயர்ந்தது. 2021-22ல் இவ்வுயர்வு 31.44 விழுக்காடாக இருந்தது.

[1] தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

## 2.2 நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்


**அட்டவணை 2.3: 2021-22 மற்றும் 2022-23 ஆண்டுகளில் நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்பற்றிய விவரங்கள்**

*(₹ கோடியில்)*

| | பொருள் | 2021-22 | 2022-23 | கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| ஆதாரங்கள் | ரிசர்வ் வங்கியில் துவக்க இருப்பு | 55,073 | 72,386 | 17,313 |
| | வருவாய் வகை வரவுகள் | 2,07,492 | 2,43,749 | 36,257 |
| | கடன்கள் மற்றும் முன் பணங்கள் மீளப்பெறப்பட்டமை | 5,355 | 1,078 | (-) 4,277 |
| | பல்வகை மூலதன வகை வரவுகள் | -- | 42 | 42 |
| | பொது கடன் வரவுகள்(நிகரம்) | 84,748 | 73,958 | (-) 10,790 |
| | பொது கணக்கு வரவுகள்( நிகரம்) | 14,400 | 16,883 | 2,483 |
| | மொத்தம் | 3,67,068 | 4,08,096 | 41,028 |
| செலவினங்கள் | வருவாய் வகை செலவு | 2,54,030 | 2,79,964 | 25,934 |
| | மூலதன வகை செலவு | 37,011 | 39,530 | 2,519 |
| | கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்கல் | 3,641 | 7,261 | 3,620 |
| | ரிசர்வ் வங்கியில் இறுதி இருப்பு | 72,386 | 81,341 | 8,955 |
| | மொத்தம் | 3,67,068 | 4,08,096 | 41,028 |

*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.1: நிதி வரும் மற்றும் செல்லும் வழிகள்**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

## 2.3 மாநிலத்தின் நிதி ஆதாரங்கள்

மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

1. **வருவாய் வகை வரவுகள்** என்பதில் சொந்த வரி வருவாய், வரியல்லாத வருவாய், மத்திய அரசு வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு மற்றும் இந்திய அரசின் உதவி மானியங்கள் என்பன அடங்கும்.

2. **மூலதன வரவுகள்** (கடன்கள் மற்றும் கடன்களில்லாத மூலதன வரவுகள்) என்பதில் முதலீடு நீக்கம் போன்ற பல்வகை மூலதன வகை வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவுகள் (சந்தை கடன்கள், நிதி நிறுவனங்கள்/ வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்கள்), இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பன அடங்கும்.

   வருவாய், மூலதன ஆகிய இரண்டு வகை வரவுகளும் மாநிலத்தின் தொகுநிதியின் பகுதிகள் ஆகும்.


3. **பொது கணக்கு நிகிர வரவுகள்** சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநலநிதிகள், வைப்புத் தொகைகள், அனாமத்து செலுத்துகைகள், போன்றவை தொடர்பான, தொகுநிதியின் பகுதிகளாக சேராத சில வரவு மற்றம் செலவு இனங்கள் உள்ளன.

   இவை, அரசியலைமப்பு சட்டத்தின் பிரிவு 266(2)ன் கீழ் அமைக்கப்பட்ட பொது கணக்கின் கீழ் வைக்கப்படும். இவை மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. இவ்வினங்களில் அரசு ஒரு வங்கியாளர் போன்று செயல்படும். இக்கணக்கின் கீழ் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை அரசின் பயன்பாட்டுக்கு கிடைக்கும்.

### 2.3.1 மாநிலத்தின் வரவுகள்

வருவாய் மற்றும் மூலதனம் ஆகிய இரு வகைகளை சார்ந்த வரவுகளே மாநில அரசின் நிதி ஆதாரங்களாக உள்ளன. இவை தவிர, பொது கணக்கில் உள்ள நிதியை (செலவு போக உள்ள நிகர தொகை) அரசு தன் நிதி பற்றாக்குறையை சமன் செய்ய பயன்படுத்துகிறது.

**2022-23 ஆண்டில் மாநிலத்தின் வரவுகளின் கூறுகள்**




2022–23 ஆண்டில் மாநில அரசிடம் இருந்த மொத்த நிதி ஆதாரம் ₹3,62,814 கோடி ஆகும். இதில், வருவாய் வகை வரவினம் ₹2,43,749 கோடி (மொத்த நிதி ஆதாரத்தில் 67.18 விழுக்காடு) ஆகும். மூலதன வகை வரவுகள் (₹1,02,182 கோடி) மற்றும் பொது கணக்கு நிகர வரவுகள் (₹16,883 கோடி) ஆகியன மொத்த நிதி முறையே 28.16 விழுக்காடு மற்றும் 4.65 விழுக்காடாக இருந்தன.

### 2.3.2 மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள்

அரசின் வருவாய் வகை வரவுகளை நிதி கணக்குகளின் விவர அறிக்கை 14 விளக்குகிறது. வருவாய் வகை வரவுகளில், மாநிலத்தின் சொந்த வரிகள் மற்றும் வரியல்லாத வருவாய்கள், இந்திய அரசிடமிருந்து மத்திய வரி மாற்றங்கள் மற்றும் உதவி மானியங்கள் என்பன அடங்கும்.

### 2.3.2.1 வருவாய் வகை வரவுகளின் போக்கும் வளர்ச்சியும்

**வருவாய் வகை வரவுகளின் கூறுகள், ஐந்து ஆண்டு காலத்தில் அதன் போக்குகள், வளர்ச்சி, GSDP தொடர்பாக அதன் மேலோங்கு விகிதம் ஆகியன அட்டவணை 2.4ல் தரப்பட்டுள்ளன.**


**அட்டவணை 2.4: வருவாய் வகை வரவுகளின் போக்கு**

| அளவுருக்கள் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| வருவாய் வகை வரவுகள் (₹ கோடியில்) | 1,73,741 | 1,74,526 | 1,74,076 | 2,07,492 | 2,43,749 |
| வருவாய் வகை வரவுகளின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *18.77* | *0.45* | (-) *0.26* | *19.20* | *17.47* |
| சொந்த வரி வருவாய் (₹ கோடியில்) | 1,05,534 | 1,07,462 | 1,06,153 | 1,22,866 | 1,50,223 |
| மத்திய அரசு வரிகள் / தீர்வைகளில் பங்கு (₹ கோடியில்) | 30,639 | 26,393 | 24,924 | 37,458 | 38,731 |
| வரியில்லாத வருவாய் (₹ கோடியில்) | 14,200 | 12,888 | 10,422 | 12,117 | 17,061 |
| இந்திய அரசின் மானியங்கள் (₹ கோடியில்) | 23,368 | 27,783 | 32,576 | 35,051 | 37,734 |
| சொந்த வருவாய் (சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய்) | 1,19,734 | 1,20,350 | 1,16,575 | 1,34,983 | 1,67,284 |
| சொந்த வருவாயின் வளர்ச்சிவீதம் (சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய்) (*விழுக்காட்டில்*) | *14.58* | *0.51* | (-) *3.14* | 15.79 | *23.93* |
| GSDP (₹ கோடியில்) (2011-12 வரிசை) | 16,30,209 | 17,43,144 | 17,88,074 | 20,71,286 | 23,64,514 |
| GSDPயின் வளர்ச்சி வீதம் (விழுக்காட்டில்) | *11.27* | *6.93* | *2.58* | *15.84* | *14.16* |
| வருவாய் வரவுகள்/GSDP (விழுக்காட்டில்) | *10.66* | *10.01* | *9.74* | *10.02* | *10.31* |

*(தற்போதைய விலைவிகிதங்களின்படியான GSDP பற்றிய தகவல்களுக்கான ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)*


➢ **2022-23ம் ஆண்டின் வருவாய் வரவுகளின் வளர்ச்சி வீதம்** 17.47 **விழுக்காடாகும்** (₹36,257 **கோடி). இந்த வளர்ச்சி வீதம் கடந்தாண்டில்** 19.20 **விழுக்காடாகும்.**

**விளக்கப்படம் 2.2 : வருவாய் வரவினங்களின் போக்கு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

வருவாய் வகை வரவின் கூறுகளின் போக்குகள் **விளக்கப்படம் 2.3**ல் கொடுக்கப்பட்டுள்ளது.





*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### *2.3.2.2 மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்*

மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களில் அதன் சொந்த வரி மற்றும் வரியில்லாத வருவாய் என்பன அடங்கும். அவை பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

#### சொந்த வரி வருவாய்

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில், மாநில GST, மாநில ஆயத்தீர்வை, வாகன வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம், நில வரி, சரக்குகள் மற்றும் பயணிகள் மீதான வரிகள் போன்றவை அடங்கும், சொந்த வரி வருவாயின் வளர்ச்சி வீதம் **விளக்கப்படம் 2.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

#### மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்

பெரும் வரிகள் மற்றும் தீர்வைகள் மூலமான வருவாய் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.5**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5: மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்**

(₹ கோடியில்)

| வருவாய் தலைப்புகள் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | பொறி கோடுகள் |
|---|---|---|---|---|---|---|
| மாநில சரக்கு மற்றும் சேவை வரி | 38,533 | 38,376 | 37,942 | 45,277 | 53,823 | |
| விற்பனை, வணிகம், ஏனையவற்றின் மீதான வரிகள் | 42,701 | 44,515 | 43,489 | 48,668 | 59,143 | |
| மாநில ஆயத்தீர்வை | 6,863 | 7,206 | 7,822 | 8,237 | 10,423 | |
| வாகனங்கள் மீதான வரி | 5,573 | 5,675 | 4,561 | 5,627 | 7,513 | |
| முத்திரைத்தாள் மற்றும் பத்திரபதிவு கட்டணங்கள் | 11,066 | 10,856 | 11,675 | 14,331 | 17,560 | |
| நில வருவாய் | 178 | 258 | 211 | 205 | 248 | |
| சரக்கு மற்றும் பயணிகள் மீதான வரி | 3 | 11 | 2 | 12 | 5 | |
| இதர வரிகள் | 617 | 565 | 451 | 509 | 1508 | |
| **மொத்தம்** | **1,05,534** | **1,07,462** | **1,06,153** | **1,22,866** | **1,50,223** | |
| முந்தைய ஆண்டைவிட வளர்ச்சி வீதம் (விழுக்காட்டில்) | **(12.59)** | **(1.83)** | **((-) 1.22)** | **(15.74)** | **(22.27)** | |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

- கடந்த ஆண்டில் 15.74 விழுக்காடாக இருந்த சொந்த வரி வருவாயின் ஆண்டு வளர்ச்சி வீதம் 2022-23ல் கணிசமாக உயர்ந்து 22.27 விழுக்காடாக இருந்தது.
- மாநில சரக்கு மற்றும் சேவை வரி (18.87 விழுக்காடு), விற்பனை, வணிகம், ஏனையவற்றின் மீதான வரிகள் (21.52 விழுக்காடு), மாநில ஆயத்தீர்வை (26.54 விழுக்காடு), வாகனங்கள் மீதான வரி (33.52 விழுக்காடு) மற்றும் முத்திரைத்தாள் மற்றும் பத்திரபதிவு கட்டணங்கள் (22.53 விழுக்காடு) ஆகியவற்றில் இந்த ஆண்டு கணிசமான உயர்வு இருந்தது.
- வரவு செலவு திட்டத்தில் (திருத்தப்பட்டது) எதிர்நோக்கப்பட்ட மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) தொகையான ₹55,390 கோடிக்கெதிராக, வசூலிக்கப்பட்ட தொகை ₹53,823 கோடியாகும் (2.83 விழுக்காடு குறைவு).

## வரியல்லாத வருவாய்

வட்டி வரவுகள், பங்கு ஆதாயம் மற்றும் இலாபங்கள், சுரங்கம் மற்றும் பிற துறை வரவுகள் போன்றவை வரியல்லாத வருவாய் ஆகும். அவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.6**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6: *மாநிலத்தின் வரியல்லாத வருவாயின் கூறுகள்***

(₹ கோடியில்)

| வருவாய் தலைப்புகள் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | பொறி கோடுகள் |
|---|---|---|---|---|---|---|
| வட்டி வரவுகள் | **6,875** | **4,356** | **3,524** | **3,918** | **4,747** | |
| பங்கு ஆதாயம் மற்றும் இலாபம் | **156** | **192** | **205** | **272** | **301** | |
| இதர வரியல்லாத வருவாய்கள் | **7,169** | **8,340** | **6,693** | **7,927** | **12,013** | |
| a) பெரிய மற்றும் சிறிய பாசன திட்டங்கள் | 45 | 48 | 60 | 66 | 71 | |
| b) சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் | 143 | 83 | 181 | 118 | 231 | |
| c) நகர்ப்புற மேம்பாடு | 1,016 | 781 | 829 | 743 | 1,092 | |
| d) கல்வி | 1,592 | 1,793 | 1,650 | 1,065 | 2,206 | |
| e) இரும்பபுசாரா சுரங்கங்கள் | 1,057 | 1,150 | 765 | 1,005 | 1,200 | |
| f) ஏனையவை | 3,316 | 4,485 | 3,208 | 4,930 | 7,213 | |
| மொத்தம் | **14,200** | **12,888** | **10,422** | **12,117** | **17,061** | |
| மாநிலத்தின் சொந்த வள ஆதாரங்களில் வரியல்லாத வரி வருவாயின் பங்கு | *11.86* | *10.71* | *8.94* | *8.98* | *10.20* | |

(*ஆதாரம்:உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)


- 2022-23ல் மாநிலத்தின் வரியல்லாத வருவாய், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹4,944 கோடி (40.80 விழுக்காடு) உயர்ந்தது. மாநிலத்தின் சொந்த வருவாயின் பங்கு என்ற வகையில், 2021-22ல்

8.98 விழுக்காடு என்ற அளவில் இருந்த வரியல்லாத வருவாய் 2022-23ல் 10.20 விழுக்காடாக உயர்ந்தது.

### *2.3.2.3 மத்திய அரசிடமிருந்து நிதி மாற்றம்*

(2018-2023) என்ற ஐந்தாண்டு காலத்தில் மத்திய அரசிடமிருந்தான நிதி மாற்றங்களின் போக்கு கீழே **விளக்கப்படம் 2.5**ல் தரப்பட்டுள்ளது:

**விளக்கப்படம் 2.5 : மத்திய அரசிடமிருந்தான நிதி மாற்றத்தின் போக்கு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

நடப்பாண்டில் மத்திய வரிகளில் பங்கு ₹1,273 கோடி (3.40 ***விழுக்காடு***) கணிசமாக உயர்ந்தது, மேலும் மத்திய அரசின் மானியங்கள் முந்தைய ஆண்டை விட 7.66 சதவீதம் அதிகரித்துள்ளது.

மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு, மத்திய அரசு வரி மாற்றத்தின் கூறுகள் மற்றும் இந்திய அரசின் உதவி மானியங்கள் குறித்த விவரங்கள் **அட்டவணைகள் 2.7** முதல் **2.9** வரையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.7: மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு–நிதி குழுவின் பரிந்துரையின்படியான தொகை மற்றும் உள்ளபடியாக மாற்றப்பட்ட தொகை**

***(₹ கோடியில்)***

| ஆண்டு | நிதி குழுவின் பரிந்துரை | நிதி குழுவின் பரிந்துரையின்–படியான தொகை* | உள்ள படியாக மாற்றப்பட்ட தொகை | வேறுபாடு |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5 (4-3)** |
| 2015–16 | சேவை வரி தவிர்த்து அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.023 விழுக்காடு மற்றும் பகிரக்கூடிய சேவை வரியின் நிகர வசூல் தொகையில் 4.104 விழுக்காடு | 23,389 | 20,354 | (-) 3,035 |
| 2016–17 | | 26,992 | 24,538 | (-) 2,454 |
| 2017–18 | | 31,189 | 27,100 | (-) 4,089 |
| 2018–19 | | 36,084 | 30,639 | (-) 5,445 |
| 2019–20 | | 41,796 | 26,393 | (-) 15,403 |
| **2015–20** | | **1,59,450** | **1,29,024** | **(-) 30,426** |
| 2020–21 | அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.189 விழுக்காடு (XVவது நிதிக் குழு பரிந்துரையின்படி) | 39,848 | 24,925 | (-) 14,923 |
| 2021–22 | அணைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.079 விழுக்காடு | 26,864 | 37,458 | 10,594 |
| **2022–23** | அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.079 விழுக்காடு | **29,884** | **38,731** | **8,847** |

* *நிதி குழுவின் பரிந்துரைகள்*

*(ஆதாரம்: நிதித் துறையால் வழங்கப்பட்ட விவரங்கள்)*

### மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு

**அட்டவணை 2.8: மத்திய வரிகள் மாற்றத்தின் கூறுகள்**

(₹ கோடியில்)

| தலைப்பு | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (CGST) | 7,561.77 | 7,489.35 | 7,406.64 | 10,308.10 | 10,945.36 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) | 603.50 | -- | -- | -- | -- |
| நிறுவன வரி | 10,654.53 | 8,998.76 | 7,520.26 | 10,912.73 | 12,982.89 |
| நிறுவன வரி தவிர்த்து வருமானம் மீதான வரிகள் | 7,846.62 | 7,051.14 | 7,709.82 | 10,911.33 | 12,678.31 |
| சுங்க வரி | 2,171.71 | 1,672.92 | 1,324.08 | 2,920.27 | 1,522.68 |
| மத்திய ஆயத்தீர்வை | 1,443.22 | 1,163.13 | 837.75 | 1,753.77 | 477.69 |
| சேவை வரி | 282.27 | 0.00 | 108.04 | 609.98 | 60.56 |
| ஏனைய வரிகள் * | 75.15 | 17.11 | 17.92 | 42.44 | 63.75 |
| **மொத்த மத்திய வரி மாற்றங்கள்** | **30,638.77** | **26,392.41** | **24,924.51** | **37,458.62** | **38,731.24** |
| முந்தைய ஆண்டை விட கூடுதல் (விழுக்காடு) | *13.06* | *(-) 13.86* | *(-) 5.56* | *50.29* | *3.40* |
| வருவாய் வகை வரவுகள் | 1,73,741 | 1,74,526 | 1,74,076 | 2,07,492 | 2,43,749 |
| வருவாய் வகை வரவுகளில் மத்திய வரிகள் மாற்றத்தின் விழுக்காடு | *17.63* | *15.12* | *14.32* | *18.05* | *15.89* |

** செல்வத்தின் மீது வரிகள், வரவு மற்றும் செலவு மீதான பிற வரிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான பிற வரிகள் மற்றும் தீர்வைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- 2022-23ல் மத்திய வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்காக உள்ளபடி மாற்றம் செய்யப்பட்ட தொகை 15வது நிதி குழு கணக்கிட்ட தொகையைவிட கூடுதலாக இருந்தது.

### இந்திய அரசின் உதவி மானியங்கள்

**அட்டவணை 2.9: இந்திய அரசின் உதவி மானியங்கள்**

(₹ கோடியில்)

| தலைப்பு | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான மானியங்கள் | 14,820.26 | 12,463.85 | 12,483.68 | 17,250.57 | 15,269.61 |
| நிதி குழு மானியங்கள் | 3,705.46 | 5,905.69 | 8,643.46 | 9,550.41 | 5,791.68# |
| மாநிலங்கள்/சட்டமன்றம் உள்ள யூனியன் பிரதேசத்திற்கும் பிற நிதி மாற்றங்கள்/ மானியங்கள் | 4,843.73 | 9,485.73 | 11,449.84 | 8,250.00 | 16,673.11$ |
| **மொத்தம்** | **23,368.21*** | **27,783.37*** | **32,576.98** | **35,050.98** | **37,734.40** |
| முந்தைய ஆண்டை விட கூடுதல் (விழுக்காடு) | *59.19* | *18.89* | *17.25* | *7.59* | *7.66* |
| வருவாய் வகை வரவுகளில் மானியத்தின் விழுக்காடு | *13.45* | *15.92* | *18.71* | *16.89* | *15.48* |

*$ GST அமல்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்கான ஈடு ₹16,215 கோடி தொகையும் சேர்ந்தது.*

*# 2022-23ல் வருவாய் பற்றாக்குறைக்கான மானியம் ₹801 கோடியை உள்ளடக்கியது மற்றும் மீதமுள்ள ₹4,990.68 கோடி தொகை ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கும், SDRF மற்றும் SDMFக்கான மானியங்களாகும்.*

** திருப்பிச் செலுத்தல்கள் தொகை 2018-19ல் (-) ₹1.24 கோடி மற்றும் 2019–20ல் (-) ₹71.90 கோடியும் உள்ளடங்கியிருக்கிறது.*

*(ஆதாரம்:உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- உதவி மானியம் முந்தைய ஆண்டைவிட ₹2,683 கோடி (7.66 விழுக்காடு) உயர்ந்தது.

- வருவாய் வரவுகளில் விழுக்காடு என்ற வகையில் 2021-22ல் 16.89 என்ற அளவில் இருந்த உதவி மானியங்கள் 2022-23ல் 15.48 ஆக குறைந்தது. இக்குறைவுக்கு தேசிய பேரழிவு நிவாரண நிதிக்கு மானியம் பெறப்படாததே முக்கிய காரணமாகும். கடந்தாண்டில் தேசிய பேரழிவு நிவாரண நிதிக்கு ₹566 கோடி மானியம் பெறப்பட்டது.

### தனியான ஒருங்கிணைப்பு முகமை (SNA)

மத்திய அரசு பொறுப்பேற்கும் (CSS) ஒவ்வொரு திட்டத்திற்கும், ஒவ்வொரு மாநில அரசும், SNAயை ஏற்படுத்த வேண்டும் என செலவின துறை, மத்திய நிதி அமைச்சகம் அறிவுறுத்துகிறது. மாநில அரசால் வணிகம் நடத்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு வணிக வங்கியில் ஒவ்வொரு CSSக்கும் ஒரு SNA கணக்கை தொடங்க வேண்டும். மேலும், புது நடைமுறையின்படி, செலவு செய்யப்படாத தொகையை எல்லா செயல்பாட்டு முகமைகளும் SNA உடைய SNA கணக்கிற்கு திருப்பி அனுப்பப்பட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டியது மாநில அரசின் கடமையாகும்.

CSSன் கீழ் நிதியை விடுவிப்பதற்கான நடைமுறையையும் மற்றும் SNA மூலம் விடுவித்த நிதியின் பயன்பாட்டை கண்காணிப்பதற்கான நடைமுறையையும் மத்திய அரசு வெளியிட்டது. இந்த நடைமுறையின்படி, மாநில அரசு, தான் பெற்ற மத்திய அரசின் பங்கை தன்னுடைய பங்குடன் சேர்த்து SNA கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

மத்திய நிதியமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, CSSன் கீழ் நிதியை பெற்ற மாநில அரசு, மாநில அரசுக்கு தன் செலவை மேற்கொள்ள கட்டுப்பாடுகள் இருப்பதால், அந்த நிதி பெற்ற நாளிலிருந்து 21 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட SNAக்கு மாற்ற வேண்டும். அதனுடைய மாநில அரசின் பங்கை 40 நாட்களுக்கு மிகாமல் மாற்றம் செய்ய வேண்டும்.

PFMS இணைய முகப்பின் SNA அறிக்கை (2022-23) படி, நடப்பாண்டில் SNAன் மத்திய அரசின் பங்காக ₹14,137.90 கோடியை மாநில அரசு பெற்றது. மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கு இணங்க, 31 மார்ச் 2023 அன்றுள்ளவாறு, மாநில அரசு மத்திய அரசின் பங்கான ₹13,629.21 கோடியையும், மாநில அரசின் பங்கான ₹11,311.31 கோடியையும் SNA கணக்கிற்கு மாற்றம் செய்தது. 31 மார்ச் 2023 அன்றுள்ளவாறு, SNA கணக்கில் செலவாகமல் உள்ள இருப்பு ₹11,453.81 கோடியாகும்.

மத்திய அரசின் பங்கு மற்றும் மாநில அரசின் பங்கை SNA கணக்கிற்கு மாற்றம் செய்வதில் ஏதேனும் காலதாமதம் உள்ளதா என்பதை அறிய தணிக்கை ஒன்பது திட்டங்களை[2] சோதனை ஆய்வு செய்தது. அதில், மத்திய அரசின் பங்கை 21 நாட்கள் கழித்து விடுவித்ததில், **இணைப்பு 2.2**ல் கூறப்பட்டுள்ளவாறு இரண்டு திட்டங்களில், 10 முதல் 20 நாட்கள் காலதாமதமும், மாநில அரசின் பங்கை 40 நாட்களுக்குள் விடுவிப்பதில், இரண்டு திட்டங்களில், 1 முதல் 20 நாட்கள் தாமதமும் இருந்ததை தணிக்கை கண்டறிந்தது.

---

[2] (i) PMAY (ii) PMGSY (iii) SRLM (iv) SPMRM (v) தமிழ்நாடு தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் (vi) புலிகள் பாதுகாப்பு இயக்கம் (vii) AMRUT (viii) MGNRGE மற்றும் (ix) ஜல் ஜீவன் இயக்கம்.

### பதினைந்தாவது நிதி குழு மானியங்கள்

15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2022–23ல் இந்திய அரசு மாநிலத்திற்கு மாற்றம் செய்த நிதி பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.10**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.10: பரிந்துரைக்கப்பட்ட, உள்ளபடி விடுவிக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட தொகைகள்**

(₹ கோடியில்)

| மாற்றம் | 15வது நிதி குழு பரிந்துரைத்த தொகை– 2022 –2023 | இந்திய அரசால் உள்ளபடி விடுவிக்கப்பட்ட தொகை 2022-23 | பற்றாக்குறை 2022-23 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (i) ஊராட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் | 2,761.00 | 2,761.00 | *இல்லை* |
| (ii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் | 1,360.00 | 1,360.00* | *இல்லை* |
| **உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்தம்** | **4,121.00** | **4,121.00** | *இல்லை* |
| மாநில பேரிடர் நிவாரண நிதி | 856.80 | 856.80 | *இல்லை* |
| மாநில பேரிடர் தணிப்பு நிதி | 214.20 | 107.10 | 107.10 |
| **பெரு மொத்தம்** | **5,192.00** | **5,084.90** | **107.10** |

* ₹ 313 *கோடி 2022-23ல் விடுவிக்கப்பட்டுள்ளது.*

(*ஆதாரம்: மாநில நிதி துறையிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்*)

2022-23ம் ஆண்டில் இந்திய அரசால் மாநில பேரிடர் தணிப்பு நிதிக்கு உள்ளபடியே விடுவிக்கப்பட்ட தொகை ₹311.10 கோடியாகும். **பத்தி 2.5.2.3**ல் கூறப்பட்டுள்ளவாறு, இதில் ₹204 கோடி 2021-22ம் ஆண்டிற்குரியது மற்றும் ₹107.10 கோடி 2022-23ம் ஆண்டிற்குரியது.

### 2.3.3 மூலதன வகை வரவுகள்


மூலதன வகை வரவுகள் என்பதில், முதலீடு நீக்கம் போன்ற பல்வகை மூலதன வகை வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவுகள் (சந்தை கடன்கள், நிதி நிறுவனங்கள் / வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்கள்). இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பன அடங்கும்.

**அட்டவணை 2.11: மூலதன வகை வரவுகளின் வளர்ச்சி மற்றும் ஆக்கக் கூறுகளின் போக்கு**

| மாநிலத்தின் நிதி வரவுகளின் ஆதாரங்கள் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| **மூலதன வகை வரவுகள் (₹கோடியில்)** | **54,849.65** | **72,158.31** | **1,08,112.22** | **1,09,839.77** | **1,02,181.78** |
| பல்வகை மூலதன வரவுகள் | -- | -- | -- | 0.01 | 41.97 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல் | 6,913.43 | 5,384.01 | 5,245.25 | 5,354.77 | 1,078.10 |
| **பொது கடன் வரவுகள்** (*₹ கோடியில்*) | **47,936.22** | **66,774.30** | **1,02,866.97** | **1,04,484.99** | **1,01,061.71** |
| *உள்நாட்டு கடன்* (₹கோடியில்) | 45,596.47 | 64,784.61 | 91,997.03 | 90,842.61 | 90,806.43 |
| *வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *6.12* | *42.08* | *42.00* | *(-) 1.25* | *(-) 0.04* |
| *இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள்* (₹கோடியில்) | 2,339.75 | 1,989.69 | 10,869.94* | #13,642.38 | 10,255.28 |
| *வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *(-) 15.00* | *(-) 14.96* | *446.31* | *25.51* | *(-) 24.83* |
| கடன் வகை மூலதன வரவுகளின் வளர்ச்சி விகிதம்(விழுக்காடு) | *4.84* | *39.30* | *54.05* | *1.57* | *(-) 3.28* |
| கடன் வகையல்லாத மூலதன வரவுகளின் வளர்ச்சி விகிதம்(விழுக்காடு) | *(-) 18.42* | *(-) 22.12* | *(-) 2.58* | *2.09* | *(-) 79.08* |
| GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *11.27* | *6.93* | *2.58* | *15.84* | *14.16* |
| மூலதன வகை வரவுகளின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *1.21* | *31.56* | *49.83* | *1.60* | *(-) 6.97* |

* ₹6,241 கோடி கடனாக வழங்கப்பட்டது; # ₹8,095 கோடி கடனாக வழங்கப்பட்டது; இவை GSTக்கு மாற்றாக வழங்கப்பட்டாலும், அவை மாநில அரசால் திருப்பிச் செலுத்தப்படாது.

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)



விளக்கப்படம் 2.6: மூலதன வரவுகளின் வளர்ச்சி

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

- **பொது கடன் வரவுகள்** 2021–22**ல்** ₹1,04,485 **கோடி என்பதிலிருந்து** 2022–23**ல்** ₹1,01,062 **கோடி ஆக குறைந்தது.**

## 2.3.4 நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு


**நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு, சொந்த வரிகள் மற்றும் வரியல்லாத வருவாய் என்பவை அடங்கிய தனது சொந்த நிதி ஆதாரங்களின் கணக்கில் மதிப்பிடப்படுகிறது.**

### வரி மற்றும் வரியல்லாதவை – மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வரவுகள்

**மாநிலத்தின்** 2018–23 **காலகட்டத்திற்கான சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் வரவுகள் குறித்து நிதி குழு மற்றும் மாநில வரவு – செலவு திட்டம் ஆகியவற்றின் மதிப்பீடுகளும் உள்ளபடியான வரவுகளும் விளக்கப்படம் 2.7ல் தரப்பட்டுள்ளன.**

விளக்கப்படம் 2.7: வரி மற்றும் வரியல்லாதவை –எதிர்ப்பார்க்கப்பட்டதும் ஈட்டப்பட்டதும்

(*ஆதாரம்: நிதிக்குழு பரிந்துரைகள். வரவு செலவுத் திட்ட உரை மற்றும் நிதிக் கணக்குகள்*)




(*ஆதாரம்: நிதிக்குழு பரிந்துரைகள். வரவு செலவுத் திட்ட உரை மற்றும் நிதிக் கணக்குகள்*)

**நடப்பாண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை விட குறைவாக இருந்தது ஆனால்** 15**வது நிதிக்குழு மதிப்பீட்டை விட அதிகமாக இருந்தது. வரியல்லாத வருவாய்** 15**வது**

நிதிக்குழு மதிப்பீட்டைவிட குறைவாக இருந்தது ஆனால் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட கூடுதலாக இருந்தது.

## 2.4 நிதியை செலவிடுதல்

மாநில அரசு, நிதிவகை பொறுப்புடைமை தொடர்பான சட்டங்களுக்கு உட்பட்டு செலவுகளை மேற்கொள்ளும் கடமையை உடையது. அதே நேரம், நிகழ்ந்து வரும் நிதி சீரமைப்பு மற்றும் தொகுத்தல் பணியால் மூலதன உள்கட்டமைப்பு மற்றம் சமூக பிரிவின் வளர்ச்சிக்கான செலவு குறையாது என்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும். இப்பத்தியும் அதன் துணை பத்திகளும் மாநிலத்தில் செலவின ஒதுக்கீடு மீதான பகுப்பாய்விள் முடிவுகளை அளிக்கின்றன.

### 2.4.1 செலவின் வளர்ச்சி மற்றம் கூறுகள்

மொத்த செலவு, அதன் கூறுகள், பல்வேறு பிரிவுகளின் பங்கு, போக்குகள் போன்றவற்றின் விவரங்கள் **அட்டவணைகள் 2.12, 2.13** மற்றும் **விளக்கப்படங்கள் 2.8** முதல் **2.10** வரை ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.12: மொத்த செலவு மற்றும் அதன் கூறுகள்

(₹ கோடியில்)

| அளவுருக்கள் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| **மொத்த செலவு** | **2,27,989.47** | **2,40,088.56** | **2,73,304.66** | **2,94,681.72** | **3,26,755.21** |
| வருவாய்வகை செலவு | 1,97,200.60 | 2,10,434.73 | 2,36,402.18 | 2,54,030.42 | 2,79,964.48 |
| மூலதன வகை செலவு | 24,310.84 | 25,631.58 | 33,067.65 | 37,010.78 | 39,529.91 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 6,478.03 | 4,022.25 | 3,834.83 | 3,640.52 | 7,260.82 |
| **GSDPல் விழுக்காடு** | | | | | |
| மொத்த செலவு/GSDP | *13.99* | *13.77* | *15.28* | *14.23* | *13.82* |
| வருவாய் வகை செலவு/GSDP | *12.10* | *12.07* | *13.22* | *12.26* | *11.84* |
| மூலதனவகை செலவு /GSDP | *1.49* | *1.47* | *1.85* | *1.79* | *1.67* |
| கடன்கள் மற்றம் முன்பணங்கள்/GSDP | *0.40* | *0.23* | *0.21* | *0.18* | *0.31* |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*


அட்டவணை 2.13 : செலவில் பல்வேறு பிரிவுகளின் பங்கு

(விழுக்காடு)

| அளவுருக்கள் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| பொது பணிகள் * | *32.15* | *32.99* | *29.25* | *29.07* | *30.65* |
| சமூக பணிகள் * | *33.86* | *33.26* | *36.82* | *35.20* | *31.61* |
| பொருளாதார பணிகள் * | *24.62* | *25.54* | *26.75* | *27.88* | *29.42* |
| ஏனையவை(உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் | *9.37* | *8.21* | *7.18* | *7.85* | *8.32* |


*(* இப்பணிகளின் கீழ் வருவாய் வகை மற்றும் மூலதன வகை செலவுகளின் மொத்தம்)*

**விளக்கப்படம் 2.8 : மொத்த செலவு : அதன் கூறுகளுடைய பங்கின் போக்கு**





*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.9 : மொத்த செலவு – செயல்பாடுகள் வாரியான செலவு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.10: செலவின் கூறுகள்**




(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

- 2022–23ல் செய்யப்பட்ட ₹3,26,755 கோடி மொத்த செலவில், வருவாய் வகை செலவு (₹2,79,964 கோடி), மூலதன வகை செலவு (₹39,530 கோடி) மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் (₹7,261 கோடி) முறையே 85.68 விழுக்காடு, 12.10 விழுக்காடு மற்றும் 2.22 விழுக்காடாக இருந்தன.

### 2.4.2 வருவாய் வகை செலவு

வருவாய் செலவானது பணிகளை தற்போதைய அளவில் தொடர்ந்து மேற்கொள்ளவும் கடந்த கால பொறுப்புகளுக்கான தொகைகளை செலுத்தவும் செய்யப்படுகிறது. எனவே, அதன் விளைவாக மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் பணிகளில் எந்த ஏற்றமும் ஏற்படுவதில்லை.

2018–23 காலகட்டத்தில் வருவாய் வகை செலவு மொத்த செலவில் சராசரியாக 86.51 விழுக்காடாக (2018-19ல் 86.50 விழுக்காடு முதல் 2022–23ல் 85.68 விழுக்காடு வரை) இருந்தது. அதன் வளர்ச்சி விகிதம் ஏற்றத்தாழ்வுகளுடன் 2018-23 காலகட்டத்தில் 6.71 விழுக்காடு முதல் 12.34 விழுக்காடு வரை இருந்து, 2022–23ல் 10.21 விழுக்காடானது. வருவாய் வகை செலவு, அதன் வளர்ச்சி விகிதம், மொத்த செலவில் அதன் விகிதம், GSDP மற்றும் வருவாய் வகை வரவு தொடர்பாக அதன் மேலோங்கு விகிதம் ஆகியன **அட்டவணை 2.14** மற்றும் வருவாய் வகை செலவின் பிரிவுவாரியான பகிர்மானம் பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.11**. ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.


**அட்டவணை 2.14: வருவாய் வகை செலவு – அடிப்படை அளவுருக்கள்**

| அளவுருக்கள் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவு (*₹ கோடியில்*) | 2,27,989.47 | 2,40,088.56 | 2,73,304.66 | 2,94,681.72 | 3,26,755.22 |
| வருவாய் வகை செலவு (*₹ கோடியில்*) | 1,97,200.60 | 2,10,434.73 | 2,36,402.18 | 2,54,030.42 | 2,79,964.48 |
| *வருவாய் வகை செலவின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *17.47* | *6.71* | *12.34* | *7.46* | *10.21* |
| மொத்த செலவில் வருவாய் வகை செலவின விழுக்காடு | *86.50* | *87.65* | *86.50* | *86.20* | *85.68* |
| வருவாய் வகை செலவு /GSDP (*விழுக்காடு*) | *12.10* | *12.07* | *13.22* | *12.26* | *11.84* |
| *வருவாய் வகை வரவில் வருவாய் வகை செலவின் விழுக்காடு* | *113.50* | *120.58* | *135.80* | *122.43* | *114.86* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.11: வருவாய் வகை செலவின் பிரிவுவாரியான பகிர்மானம்**

(*விழுக்காட்டில்*)




(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

- 2022-23ல், வருவாய் வகை செலவு முந்தைய ஆண்டைவிட ₹25,934.06 கோடி (10.21 விழுக்காடு) அளவு உயர்ந்தது. இந்த உயர்வு கடந்தாண்டில் 7.46 விழுக்காடு ஆகும். இந்தாண்டு உயர்வுக்கு, நடப்பாண்டில் ஓய்வூதியங்களும் ஓய்வூதிய பலன்களும் (பெருந்தலைப்பு 2071) ₹5,927.55 கோடியும், பொது கல்வி (பெருந்தலைப்பு 2202) ₹5,855.59 கோடியும், வட்டி செலுத்தங்களில் (பெருந்தலைப்பு 2049) ₹5,346.71 கோடியும் உயர்வு ஏற்பட்டதே முக்கிய காரணமாகும். 2021-22ல் GSDPல் 12.26 விழுக்காடாக

இருந்த வருவாய் வகை செலவினம் 2022-23ல் 11.84 விழுக்காடாக குறைந்தது.

- MTFPல் எதிர்நோக்கப்பட்டதைவிட வருவாய் வகை செலவினம் ₹13,563 கோடி (5.09 விழுக்காடு) குறைவாக இருந்தது. கூறு வாரியான விவரம் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### *2.4.2.1 வருவாய் வகை செலவில் முக்கிய மாற்றங்கள்*

மாநிலத்தின் வருவாய் வகை செலவில் பல்வேறு கணக்கு தலைப்புகளின் கீழ் நடப்பாண்டிற்கும் முந்தைய ஆண்டிற்கும் இடையே இருந்த கணிசமான வேறுபாடுகளை **அட்டவணை 2.15** காட்டுகிறது.

**அட்டவணை 2.15: 2021–22 மற்றும் 2022–2023 ஆண்டுகளிடையே வருவாய் வகை செலவில் இருந்த வேறுபாடு**

(*₹ கோடியில்*)

| பெருந் தலைப்பு | விவரம் | 2022–23 | 2021–22 | கூடுதல் / குறைவு (–) |
|---|---|---|---|---|
| 2071 | ஓய்வூதியங்களும், பிற ஓய்வூதிய பலன்களும் | 32,177.50 | 26,249.95 | 5,927.55 |
| 2202 | பொது கல்வி | 42,615.28 | 36,759.69 | 5,855.59 |
| 2049 | வட்டி செலுத்தங்கள் | 46,910.81 | 41,564.10 | 5,346.71 |
| 3456 | நுகர்பொருள் வழங்கல் | 13,767.56 | 9,533.92 | 4,233.64 |
| 2401 | பயிர்வளர்ப்பு | 13,286.61 | 10,092.71 | 3,193.90 |
| 2801 | மின் வசதி | 17,583.25 | 15,140.10 | 2,443.15 |
| 2055 | காவல் | 9,609.47 | 8,043.55 | 1,565.92 |
| 2235 | சமூக பாதுகாப்பு மற்றும் நலன் | 11,827.17 | 10,634.84 | 1,192.33 |
| 2505 | ஊரக வேலைவாய்ப்பு | 5,936.87 | 4,916.01 | 1,020.86 |
| 3055 | சாலை போக்குவரத்து | 1,908.69 | 1,046.82 | 861.87 |
| 2236 | ஊட்டச் சத்து | 4,403.12 | 3,619.76 | 783.36 |
| 2217 | நகர்ப்புற மேம்பாடு | 2,143.92 | 1,373.84 | 770.08 |
| 2225 | ஆதி திராவிடர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 3,626.29 | 2,997.13 | 629.16 |
| 2075 | இதர பொது சேவைகள் | 1,358.44 | 762.43 | 596.01 |
| 2015 | தேர்தல் | 247.97 | 865.77 | (-) 617.80 |
| 2211 | குடும்ப நலன் | 3,226.67 | 3,884.70 | (-) 658.03 |
| 2216 | வீட்டு வசதி | 2532.62 | 4,119.47 | (-) 1,586.85 |
| 2425 | கூட்டுறவு | 5438.73 | 7,321.13 | (-) 1,882.40 |
| 2245 | இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1803.43 | 9,704.44 | (-) 7,901.01 |

(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

- 115.84 விழுக்காடு (₹916.58 கோடி) 'கருணை தொகை' உயர்வு, 205.09 விழுக்காடு (₹789.35 கோடி) 'ஓய்வூதியங்களின் மாற்றியமைக்கப்பட்ட அமைப்பு' உயர்வு, 138.33 விழுக்காடு (₹812.90 கோடி) விடுப்பு ஒப்படைப்பு பயன்கள் உயர்வு காரணமாக ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய பலன்கள் மீதான வருவாய்வகை செலவு உயர்ந்தது. இது நடப்பாண்டில் அதிக அளவு பணி ஓய்வு இருந்ததை குறிக்கிறது.

- நடப்பாண்டில் 'பொது கல்வி' மீதான செலவினம் 15.93 விழுக்காடு உயர்ந்தது. முக்கியமாக, 2021-22ல் ₹4.78 கோடியாக இருந்த 'தொடக்கப்பள்ளிகளுக்காக உள்ளாட்சி அமைப்புகள் மூலம்

அளிக்கப்படும நிதியுதவியி கீழ் நேர்ந்த செலவினம் 2022–23ல் ₹806.28 கோடியாக (16,768 விழுக்காடு உயர்வு) உயர்வு, 'அரசு உயர்நிலை பள்ளிகள்' கீழ் நேர்ந்த கூடுதல் செலவான ₹1,646.46 கோடி (15.67 *விழுக்காடு*) மற்றும் 'அரசு தொடக்கப்பள்ளிகள்' கீழ் நேர்ந்த கூடுதல் செலவான ₹1,282.70 கோடி (13.24 *விழுக்காடு*) ஆகியவற்றின் காரணமாக இவ்வுயர்வு நேர்ந்தது.

- உள்நாட்டுக் கடனின் கூடுதல் கொடுப்பு காரணமாக வட்டி செலுத்தங்கள் 12.86 விழுக்காடு உயர்ந்தது. முக்கியமாக, 'சந்தை கடன்கள் மீதான வட்டி' 13.62 விழுக்காடு (₹4,363.28 கோடி) உயர்வு மற்றும் 'கடன்கள் மீதான மேலாண்மை' 19.49 விழுக்காடு (₹163.40 கோடி) உயர்வு காரணமாக இவ்வுயர்வு நிகழ்ந்த்து.

### *2.4.2.2 தவிர்க்கயிலாத செலவு*

மாநில அரசின் தவிர்க்கவியலாத வருவாய் வகை செலவில், வட்டி செலுத்தங்கள், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் என்பன அடங்கும். அரசின் நிதியிலிருந்து செய்யப்படும் செலவில் இது முன்னுரிமை பெறுகிறது.

மேலே உள்ளதை தவிர, சில நெகிழ்வற்ற செலவினங்கள் உள்ளன. இச்செலவினங்கள், மூலதன செலவினம் போன்று மாறக்கூடிய செலவினம் போல் அல்லாமல், சாதாரணமாக மாற்றவோ அல்லது மாற்றப்படவோ முடியாது. வருடாந்திர அடிப்படையில், சட்டப்பூர்வமாக தேவைப்படுபவை ஆகும். பின்வரும் செலவினங்கள் நெகிழ்வற்ற செலவினங்களுக்கு உதாரணங்களாகும்.

(i) உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகார பகிர்வு – சம்பளம் மற்றும் படிகளுக்கான சட்டப்படியான அதிகார பகிர்வு (மூலதன செலவினத்திற்கான அதிகார பகிர்வு / மாற்றம்)

(ii) சேம நல நிதிக்கான சட்டப்படியான தேவை – தொகுக்கப்பட்ட கடன் தீர் நிதி, உத்தரவாத மீட்பு நிதி, மாநில பேரிடர் தணிப்பு/பொறுப்பு நிதி போன்றவற்றிற்கான பங்களிப்புகள்.

(iii) எதிர்பாரா செலவு நிதிக்கு திரும்ப பெறுதல் – ஒரே வருடத்தில் திரும்ப பெறுதல்;

(iv) சேமநிதி/பிற குழுவிற்கு சட்டபூர்வமான மேல்வரி மாற்றம்

(v) மத்திய நிதி பெறப்பட்டதற்கு எதிராக CSSக்கான மாநில அரசின் பங்களிப்பு – மாநில அரசின் பங்கை SNAகளுக்கு மாற்றுதல்/செலவு செய்தல்

(vi) வட்டி பெறும் நிதியை முதலீடு செய்து அதன் இருப்புக்கு செலுத்தப்படும் வட்டி, பொது கடன் மீதான வட்டி (சாட்டியது) – வட்டி செலுத்தங்கள்

தவிர்க்கயிலாத செலவின் உயர்வால், வளர்ச்சி பணிகளுக்கு செலவு செய்ய அரசுக்கு குறைந்த நிதியே இருக்கும். தவிர்க்கயிலாத மற்றும் நெகிழ்வற்ற செலவுகள் மற்றும் கூறுகளின் போக்குகள் **அட்டவணை 2.16**ல்

தரப்பட்டுள்ளன. வருவாய் வகை செலவுகளில் தவிர்க்கயிலாத செலவு **விளக்கப்படம் 2.12**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.16: தவிர்க்க இயலாத மற்றும நெகிழ்வற்ற செலவின கூறுகள்**


**(₹ *கோடியில்*)**

| தவிர்க்கயிலாத செலவுகளின் கூறுகள் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 43,394 | 47,447 | 47,333 | 50,293 | 56,970 |
| ஊதிய மானியங்கள் | 7,792 | 8,190 | 8,027 | 8,416 | 9,248 |
| ஓய்வூதியங்கள் | 29,630 | 30,202 | 27,115 | 26,250 | 32,177 |
| வட்டி செலுத்தங்கள் | 28,757 | 31,980 | 36,497 | 41,564 | 46,911 |
| **மொத்தம் – தவிர்க்கயிலாத செலவு** | **1,09,573** | **1,17,819** | **1,18,972** | **1,26,523** | **1,45,306** |
| **நெகிழ்வற்ற செலவுகளின் கூறுகள்** | | | | | |
| SDRFலிருந்து செய்யப்பட்ட செலவுகள் | 786 | 707 | 1360 | 1088 | 329 |
| SDMFலிருந்து செய்யப்பட்ட செலவுகள் | 0 | 0 | 0 | 0 | 143 |
| மத்திய நிதியிலிருந்து செய்யப்பட்ட வருவாய் வகை செலவுகள் (CSS/CS உள்ளிட்டவை) | 23,293 | 22,373 | 24,859 | 28,330 | 27,672 |
| உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார பகிர்வு (பெருந்தலைப்பு – 3604) | 11,881 | 12,182 | 10,920 | 13,134 | 17,397 |
| **மொத்தம்– நெகிழ்வற்ற செலவினம்** | **35,960** | **35,262** | **37,139** | **42,552** | **45,541** |
| **வருவாய் வகை வரவினத்தில் விழுக்காடு கணக்கில்** | | | | | |
| சம்பளங்கள் மற்றம் ஊதியங்கள் | *24.98* | *27.19* | *27.19* | *24.24* | *23.37* |
| ஊதிய மானியங்கள் | *4.48* | *4.69* | *4.61* | *4.06* | *3.79* |
| ஓய்வூதியங்கள் | 17.05 | 17.31 | 15.58 | 12.65 | 13.20 |
| வட்டி செலுத்தங்கள் | *16.55* | *18.32* | *20.97* | *20.03* | *19.25* |
| **மொத்தம் – தவிர்க்கயிலாத செலவு** | ***63.07*** | ***67.51*** | ***68.34*** | ***60.98*** | ***59.60*** |
| நெகிழ்வற்ற செலவு | ***20.70*** | ***20.20*** | ***21.33*** | ***20.51*** | ***18.68*** |
| **மொத்தம்** | ***83.77*** | ***87.71*** | ***87.67*** | ***81.49*** | ***78.29*** |
| **வருவாய் வகை செலவில் விழுக்காடு கணக்கில்** | | | | | |
| சம்பளங்கள் மற்றம் ஊதியங்கள் | *22.01* | *22.55* | *20.02* | *19.80* | *20.35* |
| ஊதிய மானியங்கள் | *3.95* | *3.89* | *3.40* | *3.31* | *3.30* |
| ஓய்வூதியங்கள் | 15.03 | 14.35 | 11.47 | 10.33 | 11.49 |
| வட்டி செலுத்தங்கள் | *14.58* | *15.20* | *15.44* | *16.36* | *16.76* |
| **மொத்தம் – தவிர்க்கயிலாத செலவு** | **55.55** | **55.99** | **50.33** | **49.80** | **51.90** |
| நெகிழ்வற்ற செலவு | **18.24** | **16.76** | **15.71** | **16.75** | **16.27** |
| **மொத்தம்** | ***73.79*** | ***72.75*** | ***66.04*** | ***66.55*** | ***68.17*** |
| தவிர்க்க இயலாத செலவை தவிர்த்து மற்ற செலவினம் | 51,667 | 57,354 | 80,291 | 84,955 | 89,117 |
| வருவாய் வகை செலவில் *விழுக்காடு* | 26.20 | 27.25 | 33.96 | 33.44 | 31.83 |
| மொத்த செலவினத்தில் *விழுக்காடு* | 22.66 | 23.89 | 29.38 | 28.83 | 27.27 |
| மானியங்கள் (subsidies) | 18,922 | 20,144 | 25,110 | 21,689 | 29,559 |
| தவிர்க்க இயலாத செலவை தவிர்த்து மற்ற செலவினத்தில் மானியங்களின் பங்கு | 36.62 | 35.12 | 31.27 | 25.53 | 33.17 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.12: வருவாய் வகை செலவினத்தில் தவிர்க்க இயலாத செலவினத்தில் பங்கு**

**(விழுக்காட்டில்)**




*(ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதி கணக்குகள்)*

- ஓய்வூதிய வயதை 60[3] ஆக உயர்த்தி ஊழியர்களுக்கு ஓய்வூதிய பலன்களை வழங்கியதால் ஏற்பட்ட ஓய்வூதிய செலவு உயர்வு 25.38 விழுக்காடு (₹6,515 கோடி) காரணமாக தவிர்க்கயிலாத செலவு (₹1,45,306 கோடி) ₹18,783 கோடி உயர்ந்தது. சம்பளங்கள் மற்றும் வட்டிச் செலுத்தங்கள் முறையே ₹7,509 கோடி மற்றும் ₹5,347 கோடி உயர்ந்தது.
- 2022-23ல் வருவாய் வகை வரவினத்தில (₹2,43,749 கோடி) 19.25 விழுக்காடாக இருந்த வட்டி செலுத்தங்கள், 2021–22ல் 20.03 விழுக்காடாக இருந்தது. 2021–22ல் வருவாய் வகை செலவினத்தில் 16.36 விழுக்காடாக இருந்த வட்டிச் செலுத்தங்கள் 2022–23ல் 16.76 விழுக்காடாக உயர்ந்தது.
- பெருந் தலைப்பு 3604ல் செய்யப்பட்ட சட்டபூர்வமான அதிகார பகிர்வு, SDRF, SDMFல் செய்யப்பட்ட செலவு, CSSல் வருவாய் வகை செலவு

[3] அரசாணை எண்.29, தேதி 25 பிப்ரவரி 2021

ஆகியவை தவிர்க்க இயலாத செலவை தவிர்த்து மற்ற செலவினத்தில் அடங்கும். இது, 2018–19 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில் வருவாய் வகை செலவினத்தில் 15.71 முதல் 18.24 விழுக்காடாக இருந்தது. மேலும், இது, கடந்த ஆண்டை விட (₹42,552 கோடி) 2022–23ல் 7.02 விழுக்காடு உயர்ந்தது.

### 2.4.2.3 தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்

தமிழ்நாடு அரசு தனது பணியாளர்களுக்காக 'வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன்கூடிய ஓய்வூதிய திட்டம்' (DCPS)ஐ 1 ஏப்ரல் 2003 முதல் அமல்படுத்தியது. இத்திட்டம் 2003 அல்லது அதற்கு பின் மாநில அரசு பணியில் சேர்ந்தோர் அனைவருக்கும் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ், பணியாளர்கள் தமது அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு தொகையையும் மாநில அரசு அதற்கு சமமான தொகையையும் செலுத்துவர். இவ்விரண்டு பங்களிப்புகளும் முதலில் பொது கணக்கிற்கு (பெருந்தலைப்பு '8342–117– வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம்' (DCPS)) மாற்றப்படும்.

ஒவ்வொருவருக்குமான அரசு பணியாளர்[4] DCPS கணக்குகளை அரசு தகவல் மையம் பராமரிக்கிறது. அம்மையம் ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்படும் விகிதங்களில் வட்டியை கணக்கிட்டு ஒவ்வொரு பணியாளரின் DCPS கணக்கிலும் வருவாய் வைக்கிறது.

31 மார்ச் 2003 அல்லது அதற்கு முன்போ பணியில் சேர்ந்த மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய பலன்கள் மீதான நடப்பாண்டு செலவு ₹28,840.35 கோடி ஆகும். இது நடப்பாண்டின் மொத்த வருவாய் வகை செலவினமான ₹2,79,964.48 கோடி தொகையில் 10.30 விழுக்காடு ஆகும்.

தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும், ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறைமை மற்றும் மேம்பாட்டு அமைப்பு (PFRDA), தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேருமாறு தமிழ்நாடு அரசிடம் கோரியது (2008 மற்றும் 2009). தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்ட கட்டமைப்பில் சேர மறுத்தது (2010). ஓய்வூதிய நிதி தொகையை மாநிலத்தின் பொது கணக்கில் வைத்திருக்கும் தற்போதைய முறையையே தொடர்ந்து பின்பற்றுவதான தனது முடிவை நியாயப்படுத்தும் வகையில், நாடாளுமன்றம், PFRDA சட்டத்தை இயற்றாததை அது துவக்கத்தில் சுட்டிக்காட்டியது.

DCPS என்னும் புதிய ஓய்வூதிய திட்டம் துவக்கப்பட்டு 20 ஆண்டுகள் ஆன பின்னரும், மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேரவில்லை மற்றும் ஒரு நிதி மேலாளரை அமர்த்தவில்லை. மாறாக, மார்ச் 31, 2023 வரையில் நிதியில் சேர்ந்திருந்த ₹63,675.06 கோடி தொகையில், ₹56,638.51 கோடி தொகை இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் 'தொகை சேரும் திட்டத்துடன் கூடிய புதிய குழு ஓய்வு பெறும் திட்டம்' என்பதன் கீழ் முதலீடு செய்யப்பட்டது.

[4] உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் மற்றும் உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் உட்பட

LICயிடமிருந்து பெறப்பட்ட 2019–20ம் ஆண்டிற்கான வட்டியான ₹1,149.55 கோடியில் மேலாண்மை கட்டணம் ₹20.90 கோடி கழித்ததுப் போக மீதி தொகை மறுமுதலீடு செய்யப்பட்டது. LICல் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டியான ₹3,625.98 கோடி[5] (2020–21ல் ₹1,630.48 கோடி மற்றும் 2021–22ல் ₹1,995.50 கோடி), மாநில அரசால் கணக்களவில் சரிகட்டப்படாமலேயே, ஆயுள் காப்பீடு நிறுவனத்திலேயே மறுமுதலீடு செய்யப்பட்டது. இவ்வாறாக, அரசு கணக்கின் பெருந்தலைப்பு 0049ன் கீழ் வரவு வைக்கப்பட வேண்டிய வட்டி வரவு வைக்கப்படவில்லை. இதனால் இந்த அளவுக்கு வருவாய் வகை வரவினங்கள் குறைத்துக் காட்டப்பட்டது.

2022–23ம் ஆண்டில், DCPSல் பணியாளர்கள் மற்றும் அரசு பங்களிப்புகள் முறையே ₹3,409.52 கோடி மற்றும் ₹3,317.14 கோடி ஆகும். நடப்பாண்டில், அரசால் பெருந்தலைப்பு 2049–வட்டி கொடுப்புகள் என்ற பெருந்தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு ₹3,864.12 கோடி DCPS நிதியில் வரவு வைக்கப்பட்டது. 2017–18ல் ₹1,714.87 கோடியாக இருந்த DCPSக்கான வட்டி கொடுப்புகள் 2022–23ல் ₹3,864.12 கோடியாக உயர்ந்தது.

2021–22ம் ஆண்டில் DCPS நிதியை LICலும், அரசு கருவூல பத்திரங்களிலும் முதலீடு செய்து அதிலிருந்து அரசு வட்டியாக/சராசரி வருவாயாக முறையே 5.47 விழுக்காடு (₹1,995.50 கோடி) மற்றும் 4.29 விழுக்காடு (₹506.85 கோடி) ஈட்டியது. ஆயினும், இந்த காலகட்டத்தில் வருங்கால வைப்பு நிதி (GPF)க்குரிய வட்டி விகிதத்திற்கு ஈடான 7.10 விழுக்காடு விகிதத்தில் மாநில அரசு வட்டி செலுத்தியது.

| |
|---|
| LICல் முதலீடு செய்யப்பட்ட DCPS நிதிக்கான 2022–23க்கான வட்டியை அரசு வழங்கவில்லை என்பதால் 2022–23ம் ஆண்டிற்கான LICல் முதலீடு செய்யப்பட்ட நிதிக்கு சராசரி வட்டி கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் விளைவாக, 2022–23ம் ஆண்டில் அரசால் சந்தாதார்களுக்கு வழங்கப்பட்ட கூடுதல் வட்டியை கணக்கிட முடியவில்லை. மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்து நிதி மேலாளரை நியமித்திருந்தால், சந்தாதாரர்கள் தற்போது அரசு வழங்கும் வட்டியை விட கூடுதல் விழுக்காடு வட்டியை பெற்றிருந்திருப்பார்கள். மேலும், இந்த தவிர்த்திருக்க கூடிய கூடுதல் நிதிச் மை ஆண்டுதோறும் கூடிக்கொண்டே வந்து மாநில வருவாய் வகை செலவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது மற்றும் நிதி விவேகத்திலும் அந்த அளவுக்கு அரசு சமரசம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதே மாதிரியான காண்புரைகள் மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை 2021–22ல் இடம் பெற்றுள்ளது. அரசு தகுந்த திருத்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை. |

இதை சுட்டிக்காட்டிய போது, கூடுதல் தலைமைச் செயலாளர், பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வது தொடர்பான கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அரசு தகுந்த முடிவெடுப்பதற்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழு தனது அறிக்கையை அரசு 27 நவம்பர்

[5] 2022-23ம் ஆண்டுக்கான வட்டியை துறை அளிக்கவில்லை.

2018ல் வழங்கியுள்ளதாகவும் அது அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

### *2.4.2.4 மானியங்கள்*

மானியங்கள், நேரிடையாக வழங்கப்பட்டு, 'மானியங்கள்' (Subsidies) என்ற தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்படுவது மட்டுமின்றி, மக்களுக்கு சலுகையுடன் கூடிய பொது சேவைகளை அளிப்பதன் மூலம் மறைமுகமாகவும்[6] வழங்கப்படுகின்றன. 2018–23 காலகட்டத்தில் வருவாய் வகை வரவுகள் மற்றும் வருவாய் வகை செலவு ஆகியவற்றில் மானியங்களின் விழுக்காடு **அட்டவணை 2.17**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.17 : 2018–23 காலகட்டத்தில் மானியங்கள் மீதான செலவு**

| | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| மானியங்கள் (₹ *கோடியில்*) | 18,922 | 20,144 | 25,110 | 21,689 | 29,559 |
| வருவாய் வகை வரவுகளில் மானியங்களின் விழுக்காடு | *10.89* | *11.54* | *14.42* | *10.45* | *12.13* |
| வருவாய் வகை செலவில் மானியங்களின் விழுக்காடு | *9.60* | *9.57* | *10.62* | *8.54* | *10.56* |

(*ஆதாரம்:உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

மாநில அரசு 2018–23 காலகட்டத்தில் மானியம் வழங்கிய திட்டங்களின் பட்டியல் **அட்டவணை 2.18** மற்றும் **அட்டவணை 2.19**களில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.18 : மாநில அரசு மானியம் வழங்கிய திட்டங்களின் பட்டியல்**

(₹ *கோடியில்*)

| திட்டத்தின் பெயர் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| பொது விநியோக திட்டத்திற்கான ஆதரவு | 7,989 | 8,363 | 9,604 | 9,324 | 13,277 |
| வீட்டு நுகர்வோருக்கான கட்டண குறைப்பு காரணமாக TNEBக்கு அளிக்கப்பட்ட இழப்பீடு | 3,076 | 3,367 | 3,518 | 3,448 | 5,247 |
| தொழிற்சாலைகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு மானியம் | 2,000 | 2,560 | 1,290 | 1,559 | 1,404 |
| மாணவர்களுக்கான பேருந்து கட்டண சலுகை மீதான செலவை ஈடுகட்டுதல் | 764 | 1,275 | 3,430 | 1,289 | 1,367 |
| பெண்களுக்கான இலவச பேருந்து பயணத்திற்கான இழப்பை ஈடுகட்டுதல் | –– | –– | –– | 1217 | 2,729 |
| வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு இலவச கைத்தறி துணிகள் வழங்குதல் | 468 | 484 | 479 | 488 | 770 |
| விசைத்தறி நெசவாளர்கள் சார்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்துதல் | 343 | 336 | 384 | 371 | 375 |
| வேளாண் இடுபொருட்களுக்காக விவசாயிகளுக்கு மானியம் | 1 | 183 | 1 | –– | –– |
| பிற மானியங்கள் | 4,281 | 3,576 | 6,404 | 3,993 | 4,390 |
| **மொத்தம்** | **18,922** | **20,144** | **25,110** | **21,689** | **29,559** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

6 தொடர்புடைய பெருந்தலைப்பின் கீழ் '11–மானியங்கள்' என்ற குறுந்தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்படாத மானியங்கள் 'மறைமுக மானியங்கள்' ஆகும்.

2021–22ல் ₹21,689 கோடியாக இருந்த வெளிப்படை மானியங்கள் 2022–23ல் 36.29 விழுக்காடு (₹7,870 கோடி) உயர்ந்து ₹29,559 கோடியானது.

### மறைமுக மானியங்கள்

சமூக மற்றும் பொருளாதார பொருட்கள்/சேவைகளை அரசு அதன் அடக்கவிலையிலிருந்து குறைத்து வழங்கும் போது மறைமுக மானியங்கள் ஏற்படுகின்றன. இது நேரடியாகவோ அல்லது பொருளாகவோ அல்லது குறைந்த விலையிலோ வழங்கப்படலாம். 2022–23ல் பொருளாக வழங்கப்பட்ட முக்கிய மறைமுக மானியங்கள் **அட்டவணை 2.19**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.19: 2022–23ல் பொருளாக கொடுக்கப்பட்ட மறைமுக மானியங்களின் விவரங்கள்**

(₹ கோடியில்)

| திட்டத்தின் பெயர் | 2022-23 |
|---|---|
| முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குதல் | 25.53 |
| இலவச மிதிவண்டி வழங்குதல் | 328.36 |
| இலவச உணவு மற்றும் துணி வழங்குதல் | 7.27 |
| அரசு மருத்துவ நிறுவனங்களில், IRCS மூலமாக இலவச அமரர் ஊர்தி சேவை வழங்குதல் | 23.48 |
| மாணவர்களுக்கு இலவச மடிகணினி வழங்குதல் | 4.46 |
| தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்தல் | 38.42 |
| தையல் இயந்திர விநியோக திட்டம் | 1.35 |
| காது கேளாதோர் மற்றும் பார்வை குறைபாடு உள்ளோருக்கு ஸ்மார்ட் அலைபேசி வழங்குதல் | 10.00 |
| **பெரு மொத்தம்** | **438.87** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2022–23*)

₹438.87 கோடி மதிப்பிலான மிதி வண்டி, மடி கணினி, துணி போன்ற சில மறைமுக மானியங்கள், உதவி மானியங்களாக வகைப்படுத்தப்பட்டது.

### *2.4.2.5 சிறு தலைப்பு – 911ன் கீழ் மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்*

கணக்கு கட்டுப்பாட்டு அலுவலரால் (CGA) வெளியிடப்பட்ட 'மத்திய மற்றும் மாநிலங்களுக்கான பெரு மற்றும் சிறு தலைப்பு விவரங்கள் (LMMH), **பத்தி 3.10**ன் படி, கடந்த வருடங்களில் நிகழ்ந்த மிகை கொடுப்புகளை திருப்பிச் செலுத்த, சம்பந்தப்பட்ட பெரும்/துணை –பெருந் தலைப்பின் கீழ் 'கழிக்க – மிகையாக கொடுத்த தொகையை திருப்பிச் செலுத்துதல்' (எண் 911) என்ற தனி தலைப்பின் கீழ் பதிய வேண்டும். இது, நிதியொதுக்க கணக்குகளில் செயல்பாட்டு பெரு/துணை–பெருந் தலைப்பின் கீழுள்ள மொத்த செலவினம் பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டும்.

நடப்பாண்டில், கடந்த ஆண்டுகளில் செலவழிக்கப்படாத 651 கணக்குத் தலைப்புகளிலிருந்த ₹1,698.68 கோடியை '911–மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்' என்ற தலைப்பின் கீழ் அரசு கணக்கில் திருப்பிச் செலுத்தப்பட்டது. இதில், முழுவதும் மத்திய அரசு ஆதரவளிக்கும்

திட்டங்களான 27 திட்டங்களின் கீழ் ₹23.36 கோடியும், மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்களான 61 திட்டங்களின் கீழ் ₹14.82 கோடியும் அடங்கும். 651 திட்டங்களில், கடந்த ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட, ஒரு கோடிக்கும் மேலான செலுத்துகைகள், 54 திட்டங்களின் கீழ் ₹1646.18 கோடி திருப்பிச் செலுத்தப்பட்டது (**இணைப்பு 2.3**). இதில், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்களுக்கான பிரசவ உதவி (₹585.55 கோடி), விவசாயத்திற்காக PMFBYன் கீழ் மாநில அரசின் பங்கு (₹225.22 கோடி) மற்றும் 'விவசாயிகளின் பயிர்கடனுக்கான வட்டி குறைப்புக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம்' (₹197.27 கோடி), ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் நடந்த பெருமளவு செலுத்துகைகளும் உள்ளடங்கியுள்ளன.

'2425.00.108.KD – விவசாயிகளின் பயிர்கடனுக்கான வட்டி குறைப்புக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம்' என்ற திட்டத்தை மேலும் கூர்ந்தாய்வு செய்ததில், 2014–15 முதல் 2022–23 கால கட்டத்தில் செய்த செலவான ₹1,944.09 கோடியில், ₹991 கோடி சிறு தலைப்பு 911ன் கீழ் அரசு கணக்கிற்கு செலுத்தப்பட்டது. இது, பணம் எடுக்கப்பட்ட கணக்கு ஆண்டில், உள்ளபடியான செலவினம் கூட்டிக்காட்டப்பட்டதோடு மட்டுமல்லாமல், அந்த ஆண்டுகளில் வருவாய் வகை செலவினமும், வருவாய் பற்றாக்குறையும் அந்த அளவிற்கு கூடுதலாக காட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகிறது. மேலும், இந்த திட்டங்களின் கீழ் தவறான செலவினமும் காட்டப்பட்டுள்ளன.

இதனை சுட்டிக்காட்டிய போது, அதே வருடத்திலேயே சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பணத்தை செலுத்த அனைத்து துறைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என அரசு தெரிவித்தது (நவம்பர் 2023).

#### *2.4.2.6 மாநில நிதி குழு – GST இழப்பீட்டை உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிராமை*

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243-I மற்றும் 243-Y ஆகிய பிரிவுகளில் உள்ளபடி, அரசியலமைப்பு சட்டத் திருத்தப்பிரிவு 73 மற்றும் 74 தொடங்கப்பட்ட ஒரு ஆண்டுக்குள்ளும் அதன்பிறகு ஒவ்வொரு ஐந்து ஆண்டு முடிந்த பின்பும் மாநில அரசு நிதிக்குழுவை அமைப்பது கட்டாயமாகும். உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆராய்ந்து மேதகு ஆளுநரிடமும், மேதகு முதல்வரிடமும் அறிக்கையை மாநில நிதிக்குழு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். மாநில நிதி குழுவின் அறிக்கை மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையின் விளக்க குறிப்பாணையுடன் அரசு சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அரசாங்கத்தின் மூன்றாம் நிலை அதாவது நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், அந்தந்த மாநில நிதி குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுக்காடு வீதத்தை அடிப்படையாக கொண்டு மாநில சொந்த வரி வருவாயில், மானியங்களை பெறும். மாநில

அரசு ஆறாவது மாநில நிதி குழுவை அமைத்தது மற்றும் எல்லா மாநில நிதி குழு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையை சட்டசபையில் வைத்தது.

அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2017–18 முதல் 2021–22 வரையிலான காலகட்டத்திற்கான 5வது நிதி குழுவின் அறிக்கை, பத்தி 10.20 பரிந்துரையின் படி, GSTயை நடைமுறைப்படுத்தியதால் ஏற்படும் வருவாய் பற்றாக்குறையை ஈடுகட்ட மத்திய அரசிலிருந்து பெறப்படும் இழப்பீட்டில் 10 விழுக்காட்டை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என அரசு பரிந்துரைத்தது. இந்த பரிந்துரை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மார்ச் 2017ல் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஐந்தாவது நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, 2018–19 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில் ₹46,125.99 கோடி பெறப்பட்டு அதில் 10 விழுக்காடான ₹461.26 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்வு செய்யப்படவில்லை என்பது நிதி மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பதிவுருக்களை ஆய்வு செய்ததில் தெரிய வந்தது. இவ்வாறாக அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட GST இழப்பை பகிர்ந்து கொள்ளாதது என்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல் போனது.

இதை சுட்டிக்காட்டிய போது, மாநில நிதி குழுவின் மானியம் மூலமாகவும், திரட்டிய வருவாயில் ஒதுக்கப்பட்டது மற்றும் பிற திட்ட நிதியின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு ₹80,623.87 கோடி அனுமதி அளித்தது என்றும் அந்த தொகை GST இழப்பை விட கூடுதலாகும் எனவும் அரசு பதிலளித்தது (செப்டம்பர் 2023).

கட்டாயமாக கொடுக்கப்பட வேண்டிய மாநில நிதி குழுவின் மானியம் மற்றும் திரட்டப்பட்ட வருவாயில் பங்கு ஆகியவற்றுடன் மாநில நிதி குழு பரிந்துரைத்தவாறு பகிர வேண்டிய GST இழப்பீட்டில் 10 விழுக்காடு பகிர்வது குறித்து பதில் இல்லை. மாநில நிதி குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு அதனை நடைமுறைப்படுத்தவில்லை மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக GST இழப்பீட்டை பகிரவில்லை.

### 2.4.3 மூலதன வகை செலவு


மூலதன வகை செலவு என்பது முக்கியமாக சாலைகள், கட்டடங்கள் போன்ற நிலையான சொத்துகளை உருவாக்குவதற்காக செய்யப்படும் செலவு ஆகும். மூலதன வகை செலவு வரவு– செலவு திட்ட ஒதுக்கீடு மற்றும் அதற்கு அப்பாற்பட்ட வகையிலான முறைகள் மூலம் செய்யப்படுகிறது. அண்மைக் காலங்களில் உள்கட்டமைப்பு தேவைகள் பன்மடங்கு கூடி, மூலதன வகை செலவின் பெரும்பகுதியை மேற்கொள்ள சிறப்பு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் அரசு மூலதன வகையில் ₹39,530 கோடி செலவிட்டது. இது முந்தைய ஆண்டைவிட ₹2,519 கோடி (6.81 விழுக்காடு) கூடுதல் ஆகும். இத்தொகை வரவு செலவுத் திட்டத்தில் எதிர்நோக்கப்பட்ட தொகையான ₹38,347 கோடிக்கு எதிரானது. இது GSDPல் 1.67 விழுக்காடாகும் மற்றும் பொதுகடன் வரவுகளில் 39 விழுக்காடாகும். இது, பொதுகடன் வரவுகள்

பற்றாக்குறைகளை எதிர்கொள்வதற்கும் அல்லது கடன்களை திருப்பிச் செலுத்தவும் பயன்படுத்தப்பட்டது என எடுத்துரைக்கின்றன.

எனினும், மொத்த செலவுடன் ஒப்பிட்டால், மூலதன வகை செலவானது முந்தைய ஆண்டை விட 0.46 விழுக்காடு குறைந்தது. 2018–23 காலகட்டத்தில் இருந்த மூலதன வகை செலவின் போக்கு **விளக்கப்படம் 2.13ல்** தரப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.13: மாநிலத்தின் மூலதன வகை செலவு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### *2.4.3.1 மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்*

2021–22 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022–23ல் மூலதன வகை செலவில் இருந்த முக்கிய மாற்றங்கள் **அட்டவணை 2.20ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.20: மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்**

*(₹ கோடியில்)*

| பெருந் தலைப்பு | விவரம் | 2021–22 | 2022–23 | கூடுதல் / குறைவு(–) |
|---|---|---|---|---|
| 5055 | சாலை போக்குவரத்துக்கான மூலதன செலவு | 427.73 | 1,639.85 | 1,212.12 |
| 5054 | சாலைகள் மற்றும் மேம்பாலத்திற்கான மூலதன செலவு | 13,385.53 | 14,414.16 | 1,028.63 |
| 4250 | இதர சமூக பணிகளுக்கான மூலதன செலவு | 50.17 | 626.56 | 576.39 |
| 4700 | பெரும் பாசனத்திற்கான மூலதன செலவு | 2,131.46 | 2,691.43 | 559.97 |
| 4225 | ஆதி திராவிடர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 271.60 | 751.59 | 479.99 |
| 4711 | வெள்ள தடுப்பு பணிகளுக்கான மூலதன செலவு | 87.65 | 531.62 | 443.97 |
| 4405 | மீன்வளத்துக்கான மூலதன செலவு | 275.28 | 595.75 | 320.47 |
| 4515 | இதர ஊரக மேம்பாட்டு திட்டங்களுக்கான மூலதன செலவு | 1,745.83 | 2,005.69 | 259.86 |
| 4059 | பொது பணிகளுக்கான மூலதன செலவு | 602.66 | 821.52 | 218.86 |

| பெருந் தலைப்பு | விவரம் | 2021–22 | 2022–23 | கூடுதல் / குறைவு(–) |
|---|---|---|---|---|
| 4217 | நகர்புற மேம்பாட்டுக்கான மூலதன செலவு | 8,453.54 | 8,210.71 | (-) 242.83 |
| 4801 | மின் திட்டங்களுக்கான மூலதன செலவு | 442.39 | 57.99 | (-) 384.40 |
| 5465 | பொது நிதி மற்றும் வியாபார நிறுவனங்களில் முதலீடு | 400.00 | 0.00 | (-) 400.00 |
| 4215 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுக்கான மூலதன செலவு | 3,008.07 | 2,477.64 | (-) 530.43 |
| 5053 | விமான போக்குவரத்துக்கான மூலதன செலவு | 1,344.21 | 472.33 | (-) 871.88 |
| 4210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்திற்கான மூலதன செலவு | 2,300.78 | 1,201.20 | (-) 1,099.58 |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

மாநில போக்குவரத்து கழகங்களில் பங்கு மூலதன உதவியாக ₹462.51 கோடி மற்றும் போக்குவரத்து மேம்பாட்டு நிதி கழக வரையத்திற்கு பங்கு மூலதன உதவியாக ₹949.19 கோடி முதலீடு செய்ததன் காரணமாக '5055 – சாலை போக்குவரத்துக்கான மூலதன செலவு' என்ற தலைப்பின் கீழ் கூடுதல் செலவு ஏற்பட்டது. சாலை போக்குவரத்து (₹1,212.12 கோடி) மற்றும் சாலை மற்றும் மேம்பாலங்கள் (₹1,028.63 கோடி) கூடுதல் செலவினம் இருந்த அதே வேளையில் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவம் (48 விழுக்காடு), விமான போக்குவரத்து (65 விழுக்காடு) மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு (18 விழுக்காடு) போன்றவற்றின் வளர்ச்சி வீதம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்திருந்தது.

### *2.4.3.2 மூலதன வகை செலவின் தரம்*

நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு செலவு திட்ட மேலாண்மை என்ற கட்டமைப்பில், மாநிலம், நிதி பற்றாக்குறையை குறைந்த அளவில் வைத்திருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் வருவாய் பற்றாக்குறையை அறவே அகற்ற வேண்டும் என்றும் மூலதன செவினம் / முதலீடு (கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) ஆகியவற்றை தனது சொந்த வருவாய் ஆதாரங்களை கொண்டே செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநில அரசு தனது முதலீடுகளிலிருந்து போதிய ஆதாயங்களை பெறவும், மறைமுக மானியங்கள் என்ற வகையில் தனது வரவு –செலவு திட்டத்தில் சுமையை புகுத்தாமல் தான் வாங்கிய கடன்களை சரிக்கட்டவும் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். நடப்பாண்டில் அரசு மேற்கொண்ட முதலீடுகள் மற்றும் மூலதன வகை செலவின் மீதான பரந்த பகுப்பாய்வு முடிவுகளை அறிக்கையின் இப்பகுதி முந்தைய ஆண்டுகளின் நேர்வுகளுடன் ஒப்பிட்ட வகையில் தெரிவிக்கிறது.

#### (i) நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் தரம்

2022–23, நிதி கணக்குகளின்படி, மார்ச் 2023 நிலையில், மாநில அரசு ஒரு சட்டமுறை கழகம், 55 அரசு நிறுவனங்கள், இரண்டு கூட்டுப் பங்கு நிறுவனங்களிலும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளிலும் ₹44,525.55 கோடி முதலீடு செய்திருந்தது.

**அரசால் செய்யப்பட்ட முதலீடுகளின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணை 2.21ல் கொடுக்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 2.21: அரசால் செய்யப்பட்ட முதலீடுகள்**

| வரிசை எண் | விவரம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு இறுதியில் முதலீடு (₹ கோடியில் ) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு சேமப்பு கிடங்கு நிறுவனம் | 1 | 3.81 |
| 2 | அரசு நிறுவனங்கள் | 55 | 44,022.31 |
| 3 | கூட்டு பங்கு நிறுவனங்கள் | 2 | 0.71 |
| 4 | கூட்டுறவு அமைப்புகள் | --* | 498.72 |
| | **மொத்தம்** | **58** | **44,525.55** |

** கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை கிடைக்கப்பெறவில்லை*
*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

**கடந்த ஐந்தாண்டு காலத்தில்** (2018-19 **முதல்** 2022-23 **வரை) இந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட சராசரி வருமானம்** 0.49 **விழுக்காடு என்ற சொற்ப அளவிலேயே இருந்த நிலையில், அரசு தான் வாங்கிய கடன்களுக்கு இதே காலகட்டத்தில் சராசரியாக** 7.80 **விழுக்காடு வட்டி செலுத்தியது. நடப்பாண்டின் அரசு கடன்களுக்கான சராசரி வட்டி வீதம்** 7.37 **விழுக்காடு ஆகும்.**

2018–23 **காலகட்டத்தில் ஆண்டு முடிவில் இருந்த முதலீடுகள் மற்றும்** அவற்றின் மூலம் பெறப்பட்ட வருமானம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.22ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.22: முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்**

| முதலீடு/வருமானம்/கடன்கள் மீதான செலவு | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு இறுதியில் முதலீடு (₹ கோடியில்) | 36,480 | 39,866 | 41,578 | 42,167 | 44,526 |
| ஆண்டு இறுதியில் கடன்கள் * (₹கோடியில்) | 3,68,736 | 4,23,743 | 5,12,555 | 5,96,331 | 6,77,255 |
| வருமானம் (₹ கோடியில்) | 135 | 160 | 174 | 256 | 294 |
| வருமான விகிதம் (விழுக்காடு) | *0.37* | *0.40* | *0.42* | *0.61* | *0.66* |
| அரசு வாங்கிய கடன்களுக்காக செலுத்திய சராசரி வட்டி வகிதம் (விழுக்காடு) | *8.27* | *8.07* | *7.80* | *7.50* | *7.37* |
| செலுத்தப்பட்ட வட்டி விகிதத்திற்கும் வருமான விகிதத்திற்கும் இடையே வேறுபாடு (விழக்காடு) | *7.90* | *7.67* | *7.38* | *6.89* | *6.71* |
| அரசு வாங்கிய கடன்களுக்கான வட்டிக்கும் முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானத்திற்கும் இடையே வேறுபாடு (₹ கோடியில்) # | 2,881.92 | 3,057.72 | 3,068.46 | 2,905.31 | 2,987.69 |

*# ஆண்டு இறுதியில் முதலீடு X வட்டி விகிதத்திற்கும் வருமானத்திற்கும் இடையே வேறுபாடு*
** பொருட்கள் மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு வழங்கப்பட்ட கடன்களை மாநில அரசு அதனுடைய ஆதாரத்திலிந்து திரும்ப செலுத்தாது. எனவே நிலுவையிலுள்ள கடன்களில் 2020-21ல் ₹6,241 கோடியும் 2021-22ல் ₹14,336 கோடி எடுத்துக்கொள்ளப்படவில்லை.*
(ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

2022-23ம் ஆண்டில் அரசு மாநில போக்குவரத்து கழகங்களில் ₹1,411.70 கோடியும் (தமிழ்நாடு மாநில மேம்பாட்டு நிதி கழகம்) மற்றும் சென்னை மெட்ரோ இரயில் கழகத்தில் ₹935.78 கோடியும் முதலீடு செய்திருந்தது.

### முதலீடு தொகை தொடர்பாக அரசுக்கும் பொதுத் றை நிறுவனங்களுக்கும் இடையே வேறுபாடு

நிதி கணக்குகளின் விவர அறிக்கை 19– பிரிவு 2ல் கூறப்பட்டுள்ளவாறு, 23 நிறுவனங்கள்/கழகங்கள் **(இணைப்பு 2.4)** தொடர்பாக மேற்படி வேறுபாடு இருந்தது. பெருமளவிலான வேறுபாடுகள் (நிதி கணக்குகளின் விவர அறிக்கை 16ன் படி) (i) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (ii) மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை) மற்றும் (iii) சென்னை மெட்ரோ இரயில் ஆகிய நிறுவனங்கள் தொடர்பாக இருந்தன.

வேறுபாடுகளை ஒத்திசைவு செய்ய அரசு மற்றும் பொதுத் றை நிறுவனங்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

### (ii) கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட மற்றும் மீளப் பெறப்பட்ட கடன்கள்

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தவிரவும், அந்த நிறுவனங்களுள் பலவற்றுக்கு அரசு கடன்கள் மற்றும் முன்பணங்களும் தந்து வந்துள்ளது.

மார்ச் 31, 2023 நிலையில் நிலுவையில் இருந்த கடன்கள் மற்றும் முன்பணங்கள், கடந்த ஐந்து ஆண்டுகளில் வட்டி வரவுகள் மற்றும் செலுத்தப்பட்ட வட்டி ஆகியன பற்றிய விவரங்களை **அட்டவணை 2.23** அளிக்கிறது.

**அட்டவணை 2.23: நிலுவையில் இருந்த கடன்கள் மற்றும் முன்பணங்கள்**

(*₹ கோடியில்*)

| வழங்கப்பட்ட மற்றும் மீளப்பெறப்பட்ட கடன்கள் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு துவக்கத்தில் நிலுவையில் இருந்த கடன்கள் | 41,794 | 41,359 | 39,997 | 38,587 | 36,872 |
| இவ்வாண்டில் அளிக்கப்பட்ட கடன் தொகை | 6,478 | 4,022 | 3,835 | 3,640 | 7,261 |
| இவ்வாண்டில் மீள பெறப்பட்ட கடன் தொகை | 6,913 | 5,384 | 5,245 | 5,355 | 1,078 |
| ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த கடன்கள் | 41,359 | 39,997 | 38,587 | 36,872 | 43,055 |
| நிகர கூடுதல் | (-) 435 | (-) 1,362 | (-) 1,410 | (-) 1,715 | 6,183 |
| பெறப்பட்ட வட்டி | 2,703 | 4 | 346 | 320 | 372 |
| அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்களின் நிலுவை தொகையில் வட்டி வரவுகளின் விழுக்காடு | *6.50* | *0.01* | *0.88* | *0.85* | 0.93 |
| அரசு வாங்கி நிலுவையிலுள்ள கடன்களுக்காக செலுத்தப்பட்ட வட்டியின் சராசரி விகிதம் (விழுக்காட்டில்) | *8.27* | *8.07* | *7.80* | *7.50* | *7.37* |
| செலுத்தப்பட்ட வட்டி மற்றும் பெறப்பட்ட வட்டி ஆகியவற்றின் விகிதங்களிடையே வேறுபாடு (விழுக்காடு) | *1.77* | *8.06* | *6.86* | *6.60* | *6.44* |

(*ஆதாரம்:உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

### (iii) முடிவுறா திட்டங்களில் செய்யப்பட்ட மூலதனம்

31 மார்ச் 2023 அன்றுள்ளவாறு, ஆண்டு வாரியான முடிவுறா திட்டங்களின் விவரங்கள் **அட்டவணை 2.24**லும், துறை வாரியான விவரங்கள் **அட்டவணை 2.25**லும் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.24: துறை வாரியான முடிவுறா திட்டங்களின் விவரங்கள்

(₹ கோடியில்)

| துறை | முடிவுறா திட்டங்களின் எண்ணிக்கை | எதிர்நோக்கப்பட்ட விலை | நடப்பாண்டில் செய்யப்பட்ட செலவு |
|---|---|---|---|
| கட்டடங்கள் | 7 | 62.71 | 6.97 |
| நீர்பாசனம் | 27 | 1,620.01 | 127.81 |
| சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் | 132 | 1,144.82 | 299.62 |
| ஏனையவை | 1 | 200.00 | 149.96 |
| **மொத்தம்** | **167** | **3,027.54** | **584.36** |

அட்டவணை 2.25 முடிவுறா திட்டங்களின் வயது வாரியான விவரம்

(₹ கோடியில்)

| ஆண்டு | முடிவுறா திட்டங்களின் எண்ணிக்கை * | எதிர்நோக்கப்பட்ட விலை | நடப்பாண்டில் செய்யப்பட்ட செலவு |
|---|---|---|---|
| < 1 ஆண்டு | 92 | 680.81 | 160.56 |
| > 1 ஆண்டு | 45 | 1,666.21 | 284.53 |
| > 2 ஆண்டுகள் | 17 | 514.86 | 42.19 |
| > 3 ஆண்டுகள் | 8 | 35.47 | 4.64 |
| > 4 ஆண்டுகள் | –– | –– | –– |
| > 5 ஆண்டுகள் | 1 | 1.60 | –– |
| > 6 ஆண்டுகள் | –– | –– | –– |
| > 7 ஆண்டுகள் | 4 | 128.59 | 92.44 |
| | **167** | **3,027.54** | **584.36** |

* 31 மார்ச் 2023க்குள் முடிக்கப்பட வேண்டிய திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

(ஆதாரம்: நிதிக் கணக்குகள் 2022-23)

திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க தவறும் பட்சத்தில் திட்ட செலவு கூடும் மற்றும் சமூகத்திற்கு இத்திட்டத்தினால் கிடைக்கும் பயன்கள் காலதாமதமாகும். திட்டங்களிலிருந்து பெறப்படும் வருமானமும், காலதாமதம் காரணமாக தள்ளிப் போகும். கால மற்றும் செலவு விரயத்தை தடுக்கும் பொருட்டு, மேற்சொன்ன திட்டங்களை விரைந்து முடிக்க திறன்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

### சேம நிதியிலிருந்து மூலதன செலவு செய்யப்பட்டமை

நிதி கணக்குகளில் தெரிவிக்கப்பட்ட மூலதன வகை செலவு (₹39,529.91 கோடி), சேம நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகையை (₹8.74 கோடி) கழித்தப்பின் உள்ள நிகர தொகையை குறிக்கும்.

### 2.4.4 செலவு முன்னுரிமைகள்

மனித வள வளர்ச்சி நிலைகளை உயர்த்துவதற்கு மாநிலங்கள் கல்வி, நலவாழ்வு போன்ற முக்கிய சமூக பணிகள் மீதான தமது செலவை உயர்த்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கான ஒதுக்கீடு தேசிய சராசரி ஒதுக்கீட்டைவிட குறைவாக இருந்தால், அப்பிரிவிற்கான நிதி முன்னுரிமை (மொத்த செலவில் அப்பிரிவிற்கான ஒதுக்கீட்டின் விகிதம்) குறைவாக உள்ளது என பொருள்படும். மொத்த செலவில் இத்தகைய கூறுகளின் விகிதம் அதிகமாக இருப்பின், செலவின் தரம் மேம்பட்டதாக கருதப்படும். நலவாழ்வு, கல்வி மற்றும் மூலதன வகை செலவு தொடர்பான மாநிலத்தின் செலவு முன்னுரிமை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.26**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.26: செலவு முன்னுரிமைகள்**

*(விழுக்காட்டில்)*

| | மொத்த செலவு / GSDP | மூலதன வகை செலவு / மொத்த செலவு | கல்வி மீதான செலவு/ மொத்த செலவு | நலவாழ்வு மீதான செலவு / மொத்த செலவு |
|---|---|---|---|---|
| *பொது வகை மாநிலங்கள்* (2018–19) | 16.38 | 15.58 | 14.76 | 5.07 |
| *தமிழ்நாடு* (2018–19) | 13.99 | 13.50 | 14.66 | 5.48 |
| *பொது வகை மாநிலங்கள்* (2022–23) | 15.79 | 15.22 | 14.85 | 5.68 |
| *தமிழ்நாடு* (2022–23) | 13.82 | 14.32 | 13.57 | 5.39 |

*(ஆதாரம்: GSDPக்கு பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை)*


- 2018-19ல் 13.99 விழுக்காடாக இருந்த GSDPல் மாநில அரசின் மொத்த செலவினத்தின் விழுக்காடு 2022-23ல் 13.82 விழுக்காடாக குறைந்த அதே வேளையில் பொது வகை மாநிலங்களில் இது 16.38 விழுக்காட்டிலிருந்து 15.79 விழுக்காடு குறைந்தது.
- 2018-19ல் 13.50 விழுக்காடாக இருந்த மாநிலத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினம், 2022-23ல் 14.32 விழுக்காடாக உயர்ந்த அதே நேரத்தில் பொது வகை மாநிலத்தில் 15.58 விழுக்காட்டிலிருந்து 15.22 விழுக்காடு குறைந்தது.

### 2.4.5 குறுந்தலைப்பு வாரியான செலவு

இவ்வாண்டில் செய்யப்பட்ட குறுந்தலைப்பு வாரியான செலவு **விளக்கப்படம் 2.14**ல் தரப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.14: குறுந்தலைப்பு வாரியான செலவு**

*(விழுக்காட்டில்)*




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

நடப்பாண்டில் ஊதியங்கள் மற்றும் படிகள், ஓய்வூதியம் மற்றும் வட்டி ஆகிய பொறுப்புகள் தொடர்பான செலவு மொத்த வருவாய் வகை மற்றும் மூலதன செலவில் 46.04 விழுக்காடாக இருக்க, இவ்வாண்டில் செய்யப்பட்ட முதலீடுகள் மிக குறைந்த அளவாக 0.92 விழுக்காடு மற்றும் பெரு பணிகள் மீதான செலவு 10.44 விழுக்காடு ஆக இருந்தன. அரசு மூலதன செலவிற்கு தகுந்த முன்னுரிமை தரவில்லை என்பதை குறிக்கிறது.

## 2.5 பொது கணக்கு

சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநிதிகள், வைப்பு தொகைகள், அநாமத்து, செலுத்தங்கள், பேன்றவை தொடர்பான வரவு– செலவு நடவடிக்கைகள் தொகுநிதியின் பகுதிகளாக சேராமல் அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 266(2)ன் படி அமைக்கப்பட்ட பொது கணக்கின் கீழ் வைக்கப்படும். இவை மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. இவ்வினங்களில் அரசு ஒரு வங்கியாளர் போன்று செயல்படும். இக்கணக்கின் கீழ் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை அரசின் பயன்பாட்டுக்கு கிடைக்கும்.

### 2.5.1 பொது கணக்கின் நிகர இருப்புகள்

மாநிலத்தின் பொது கணக்கில் இருந்த பகுதிவாரியான நிகர இருப்புகள் **அட்டவணை 2.27**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.27: பொது கணக்கில் 31 மார்ச் அன்று இருந்த பகுதிவாரியான நிகர இருப்பு**

*(₹ கோடியில்)*


| பகுதி | துணை பகுதி | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|---|
| I சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை. | (–) 24,109.76 | (–) 26,475.22 | (–) 29,352.41 | (–) 32,032.78 | (–) 33,884.02 |
| J. சேம நிதிகள் | (a) வட்டியுடன் கூடிய சேமநிதிகள் | –– | (–) 113.42 | (–) 113.42 | (–) 113.42 | (–) 1,198.57 |
| | (b) வட்டி ஈட்டாத சேம நிதிகள் | (–) 1,330.01 | (–) 2,044.94 | (–) 2,030.89 | (–) 2,273.04 | (–) 2,212.12 |
| K. வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள் | (a) வட்டியுடன் கூடிய வைப்பு நிதிகள் | (–) 8,008.32 | (–) 9,323.98 | (–) 8,014.50 | (–) 7643.95 | (–) 9,992.02 |
| | (b) வட்டி ஈட்டாத வைப்பு நிதிகள் | (–) 13,646.16 | (–) 15,235.43 | (–) 22,096.51 | (–) 26,667.81 | (–) 28,410.75 |
| | (c) முன்பணங்கள் | 7.71 | 7.67 | 7.64 | 7.62 | 7.57 |
| L. அநாமத்து மற்றும் பல்வகை | (b) அநாமத்து | (–) 141.69 | (–) 283.10 | 29.01 | 57.60 | 131.71 |
| | (c) பிற கணக்குகள் | 10,100.00 | 3,692.59 | 5,841.15 | 15,108.59 | 14,402.40 |
| | (d) அயல்நாட்டு அரசுகளுடனான கணக்குகள் | 1.24 | 1.24 | 1.24 | 1.24 | 1.24 |
| | (e) பல்வகை | –– | –– | –– | –– | –– |
| M. செலுத்தங்கள் | (a) பண அஞ்சல்கள் மற்றும் பிற செலுத்தங்கள் | (–) 0.50 | (–) 0.51 | (–) 0.48 | 5.47 | 5.55 |
| | (b) அரசுகளுக்கிடையேயான சரிக்கட்டல் கணக்கு | 5.10 | 8.56 | 8.48 | 8.83 | 5.02 |
| மொத்தம் | | (–) 37,122.39 | (–) 49,766.54 | (–) 55,720.69 | (–) 53,541.65 | (–) 61,143.99 |

*குறிப்பு : (+)பற்று மீதத்தையும் (–) வரவு மீதத்தையும் குறிக்கும்*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.15: பொது கணக்கு இருப்புகளின் கூறுகளில் ஆண்டுவாரியான மாற்றங்கள்**

*(₹ கோடியில்)*




(*ஆதாரம்:* உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

- 2021–22ல் ₹53,541.65 கோடி ஆக இருந்த அரசின் பொது கணக்கு பொறுப்புகள் 2022–23ல் ₹61,143.99 கோடியாக, 14.20 விழுக்காடாக உயர்ந்தது

- பொது கணக்கிற்கான பெரும் பங்களிப்புகள் சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி போன்றவை மற்றும் வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள்

### 2.5.2 சேம நிதிகள்

மாநில அரசின் பொது கணக்கின் கீழ் குறிப்பான மற்றும் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக சேம நிதிகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றுக்கான தொகைகள் மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து பங்களிப்பு அல்லது மானியங்கள் என்ற வகையில் பெறப்படுகின்றன.

சேம நிதிகளில் 31 மார்ச் 2023 அன்று இருந்த மொத்த மீதம் ₹14,020.21 கோடி (வட்டியுடன் கூடிய சேமநிதிகள் ₹1,198.57 கோடியும், வட்டியில்லாத சேமநிதிகள் ₹12,821.64 கோடி உட்பட) ஆகும். பெரும் சேம நிதிகள் சில கீழே விளக்கப்பட்டுள்ளன.

#### *2.5.2.1 தொகுக்கப்பட்ட கடன்தீர் நிதி*

பன்னிரெண்டாவது நிதி குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, சந்தை கடன்கள், பிற கடன்கள் மற்றும் கடன் பொறுப்புகளை தீர்க்க மாநில அரசுகள் கடன் தீர் நிதியை (CSF) உருவாக்கின. அந்நிதியை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது.

சந்தை கடன்கள் , மத்திய அரசு கடன்கள் மற்றும் மாநில அரசுக்கு கிடைக்கப் பெற்ற தேசிய சிறுசேமிப்பு நிதிக்கு விடுவிக்கப்பட்ட சிறப்பு கடன் பத்திரங்கள் போன்ற கடன்களை தீர்க்க 2005–06 மாநில அரசு CSFஐ உருவாக்கியது. அந்நிதியை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது. தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, முந்தைய ஆண்டின் முடிவில் நிலுவையில் இருந்த கடன் பொறுப்புகளில் 0.5 விழுக்காடு என்ற விகிதத்தில் அரசு CSFக்கு பங்களிக்கலாம். இவ்வாண்டில் மாநில அரசு அந்நிதிக்கு ₹632.94 கோடி (முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி மட்டும்) பங்களித்தது. இது 1 ஏப்ரல் 2022 அன்று நிலுவையில் இருந்த ₹6,10,666 கோடி பொறுப்புகளில் 0.10 விழுக்காடு மட்டுமே ஆகும்.

மார்ச் 31, 2023 நிலையில் CSFல் ₹8703.35 கோடி மீதம் இருந்தது முதலீடுகளிலிருந்து நடப்பாண்டில் ₹112.86 இலட்சம் வட்டி பெறப்பட்டது.

பொறுப்புகளின் உயர்ந்துவரும் போக்கு காரணமாக, வருங்கால பொறுப்புகளை போதுமான அளவில் ஏற்கும், வகையில் அரசு இந்நிதிக்கு அதிக அளவில் பங்களிப்பை அளிக்க வேண்டும்.

#### *2.5.2.2 மாநில பேரிடர் நிவாரண நிதி*

SDRF வழிகாட்டுநெறிகளின்படி, மத்திய மற்றும் மாநில அரசுகள் அந்நிதிக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பங்களிக்க வேண்டும் (75:25). அந்த

பங்களிப்பின் பொது கணக்கிற்கு பெருந்தலைப்பு – 8121க்கு மாற்றப்படும். நடப்பாண்டில் செலவு பெருந்தலைப்பு – 2245ன் கீழ் கணக்கு வைக்கப்படும்.

ரிசர்வ் வங்கியின் மிகைப்பற்று ஒழுங்காற்று வழிகாட்டுநெறிகளின் கீழ் மிகைப் பற்றுக்கு பொருந்தக்கூடிய வட்டி விகிதத்தில் மாநில அரசுகள் SDRFக்கு வட்டி செலுத்த வேண்டும். அவ்வட்டி அரையாண்டு அடிப்படையில் வரவு வைக்கப்பட வேண்டும். SDRFல் சேரும் தொகை மற்றும் SDRF தொகையின் முதலீட்டிலிருந்து பெறப்படும் வருவாய், மத்திய அரசின் தேதியிட்ட பத்திரங்கள், ஏலம் விடப்படும் அரசு கடன் பத்திரங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளில் வட்டியுடன் கூடிய வைப்புத் தொகை ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான செலவை எதிர்க்கொள்ள மட்டுமே SDRFஐ பயன்படுத்த வேண்டும். பேரிடர் ஆயத்த நிலை, மறு சீரமைப்பு, மறுகட்டுமானம் மற்றும் துயர் தணிப்பு பணிகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு SDRFஐ பயன்படுத்தக்கூடாது. இத்தகைய செலவுகள் வழக்கமான வரவு செலவு திட்டம்/மாநில திட்ட நிதி போன்றவை மூலம் எதிர்கொள்ளப்பட வேண்டும்.

மாநில அரசு 2022–23ல் SDRF கணக்கிற்கு ₹1,142.40 கோடி (மத்திய அரசு பங்கு ₹856.80 கோடி மற்றும் தனது பங்கு ₹285.60 கோடி) தொகையை இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும் பொருட்டு மாற்றியது.

SDRFலிருந்து செய்யப்பட்ட செலவு பற்றிய விவரங்கள் அட்டவணை **2.28**.ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.28: SDRFலிருந்து செய்யப்பட்ட செலவு பற்றிய விவரங்கள்**

(*₹ கோடியில்*)

| கணக்க பெருந்தலைப்பு | சிறு தலைப்பு | 2022–23ல் ஆன செலவு |
|---|---|---|
| 2245– இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் 01–வறட்சி | 101 – கருணை நிவாரணம் | 0.04 |
| | 911 – கழிக்க : கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது | (–) 0.03 |
| | **துணை மொத்தம்** | **0.01** |
| 2245– இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் 02–வெள்ளங்கள், புயல்கள் போன்றவை. | 101 – கருணை நிவாரணம் | 8.47 |
| | 102 – குடிநீர் வழங்கல் | 373.50 |
| | 111 – இறந்தவர் குடும்பங்களுக்கு கருணை தொகை | 10.55 |
| | 113 – வீடுகள் பழுதுநீக்கம் / மறுகட்டுமானத்திற்காக உதவி | 4.14 |
| | 114 – வேளான் இடுபொருட்கள் வாங்க விவசாயிகளுக்கு உதவி | 172.11 |
| | 117 – கால்நடைகள் வாங்க விவசாயிகளுக்கு உதவி | 0.57 |
| | 118 – சேதமுற்ற படகுகள்/ மீன்பிடி கருவிகள் பழுது நீக்கம்/புதிதாக வாங்க உதவி | 0.01 |
| | 800 – பிற செலவுகள் | 20.73 |
| | 282 – பொது சுகதாரம் | 0.00 |
| | 911 கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது. | (–) 6.14 |
| | **துணை மொத்தம்** | **583.94** |

| | | |
|---|---|---|
| 80–பொது | 102 – பேரழிவு ஏற்படக்கூடிய இடங்களில் உடனடி நடவடிக்கை மற்றும் இயற்கை பேரழிவு மேலாண்மை | 7.56 |
| | 800 – பிற செலவுகள் | 136.69 |
| | 911 – கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது. | (–) 9.91 |
| | **துணை மொத்தம்** | **134.34** |
| | பெரு மொத்தம் | **718.29** |
| 05 – மாநில பேரிடர் நிவாரண நிதி | 901– கழிக்க – SDRFலிருந்து செலவிடப்பட்ட தொகை | **329.25** |
| 08 – மாநில பேரிடர் தணிப்பு நிதி | 902– கழிக்க – SDMFலிருந்து செலவிடப்பட்ட தொகை | **142.80** |

(*ஆதாரம்: நீதிக் கணக்குகள் 2022-23*)

2022-23ம் ஆண்டில் ₹329.25 கோடி செலவிடப்பட்டது. இந்நிதியில் 31 மார்ச் 2023 நிலையில் ₹813.15 கோடி மீதம் இருந்தது.

### *2.5.2.3 மாநில பேரிடர் தணிப்பு நிதி*

பேரிடர் மேலாண்மை சட்டம், 2005, பிரிவு 48(1)(c)ன் கீழ் 2021–22ம் ஆண்டில் பேரிடர் தணிப்பு நிதி உருவாக்கப்பட்டது. இந்த நிதி SDRF/NDRF சம்பந்தப்பட்ட பேரிடர் தணிப்பு திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்நிதிக்கு மத்திய அரசால் 75 விழுக்காடு பங்களிப்பு போக மீதமுள்ள 25 விழுக்காடு மாநில பேரிடர் தணிப்பு நிதிக்கு மாநில அரசு பங்களிக்க வேண்டும்.

2022–23ம் நடப்பாண்டில் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து 2021–22க்காக ₹204 கோடியும், 2022–23க்காக ₹107.10 கோடியும் பெற்றது. 2022–23ம் ஆண்டில், மாநில அரசு, 2021–22க்கு ₹68.00 கோடியும், 2022–23க்கு ₹35.70 கோடியும் இந்நிதிக்கு மாநில அரசு மாற்றம் செய்தது. 2022–23ல் மாற்றம் செய்யப்பட்ட தொகை₹414.80 கோடியாகும். 2022–23ல் அரசு பேரிடர் தணிப்பு திட்டங்களுக்கு ₹142.80 கோடியை செலவு செய்தது. 31 மார்ச் 2023 அன்று இந்நிதியில் ₹272 கோடி மீதம் இருந்தது.

### *2.5.2.4 உத்தரவாத மீட்பு நிதி*

அளிக்கப்பட்ட உத்தரவாதங்களை பயன்படுத்தும் நேர்வுகளில் அவற்றுக்கான தொகைகளை செலுத்துவதற்காக உத்தரவாத மீட்பு நிதி மார்ச் 2003ல் அமைக்கப்பட்டது. அதனை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது. நடப்பாண்டில் வழங்கப்பட்ட அரிகரிக்கும் உத்தரவாதத்தின் விளைவாக செயல்படுத்தும் உத்தரவாத தொகைக்கும் மற்றும் நிலுவையிலுள்ள செயல்படுத்தப்படும் உத்தரவாத தொகைக்கு இணையாக குறைந்த பட்சம் ஐந்தில் ஒரு பங்கு அளிக்க வேண்டும்.

நடப்பாண்டில், நடப்பாண்டு முடிவில் உள்ள உத்தரவாத தொகையில் தர வேண்டிய 1/5 தொகையான ₹18,141.84 கோடிக்கு எதிராக ₹1,004.50 கோடி (1.11 விழுக்காடு) மட்டுமே செலுத்தியது. இவ்வாறாக, நடப்பாண்டில் இந்நிதிக்கு குறைவான பங்களிப்பு ₹17,137.34 கோடியாகும். நிதியில் 31 மார்ச் 2023 அன்று இருந்த மீதம் ₹2,150.23 கோடியாகும். இதில் ₹2,138.74 கோடி அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்திருந்தது. நடப்பாண்டில்

பத்திரங்கள் விற்றதில் கிடைத்த ஆதாயம் ₹34.32 கோடியாகும். 2022–23ல் எந்த உத்தரவாதமும் பயன்படுத்தப்படவில்லை.


## 2.6 பொது கடன் மேலாண்மை

தேவையான அளவு நிதி பெறுதல், அதற்குரிய நோக்கங்களை அடைதல், சட்டம் இயற்றுவது அல்லது ஆண்டு வரவு–செலவு திட்டம் மூலமான அறிவிப்புகள் மூலம் அரசு நிர்ணயித்த பிற அரசு கடன் மேலாண்மை இலக்குகளை அடைதல் ஆகிய நோக்கங்களுக்காக அரசின் கடன் நிலையை மேலாண்மை செய்வதற்கான ஒரு உத்தியை வகுத்து செயல்படுத்துவது கடன் மேலாண்மை எனப்படும்.

2018–19 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் இருந்த கடன் அளவின் போக்கு (அரசின் உள்நாட்டு கடன், இந்திய அரசிடமிருந்தான கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் பொது கணக்கு பொறுப்புகள் உட்பட) மற்றும் GSDPல் கடன் அளவின் பங்கு ஆகியன **விளக்கப்படம் 2.16ல்** தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.16: நிலுவையிலுள்ள பொதுகடன் பொறுப்புகள் மற்றும் GSDPல் அதனுடைய விழுக்காடு**

(*₹ கோடியில்*)




* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட தொகை மாநில அரசின் ஆதாரங்களிலிருந்து செலுத்தப்படாது என்பதால், 2020–21 ₹6,241 கோடியும், 2021–22 மற்றும் 2022–23ல் ₹14,336 கோடியும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

### 2.6.1 கடன் நிலையின் கூறுகள்

மாநில அரசின் மொத்த கடனில் பொதுவாக அரசின் உள்நாட்டு கடன் (சந்தை கடன்கள், ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற வழிவகை முன்பணங்கள், தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு அளிக்கப்பட்ட சிறப்பு

**பத்திரங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள்), மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள், பொது கணக்கு பொறுப்புகள் ஆகியன அடங்கும். கடன் தொகையின் கூறுவாரியான போக்கு அட்டவணை 2.29லும் மற்றும் 2022–23 இறுதியில் நிலுவையில் இருந்த கடன் தொகையின் பிரிவுகள் விளக்கப்படம் 2.17லும் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2.29: கடன் தொகையின் கூறுவாரியான போக்கு**


| நிதிப் பொறுப்புகளின் கூறுகள் | | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|---|
| **நிலுவையிலுள்ள மொத்த கடன்கள் (அ + ஆ)** | | **3,68,736** | **4,23,743** | **5,18,796** | **6,10,667** | **6,91,591** |
| *(அ) பொது கடன் (₹கோடியில்)* | *உள்நாட்டு கடன்* | *3,04,350* | *3,52,625* | *4,29,748* | *5,02,205* | *5,67,635* |
| | *இந்திய அரசு கடன்கள்* | *17,292* | *17,925* | *27,440* | *39,731* | *48,258** |
| *(ஆ) பொது கணக்கு பொறுப்புகள் (₹கோடியில்)* | | *47,094* | *53,193* | *61,608* | *68,731* | *75,698* |
| **நிலுவையில் இருந்த கடனின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)** | | *12.93* | *14.92* | *22.43* | *17.71* | *13.25* |
| கடன் /GSDP (*விழுக்காடு*) | | *22.62* | *24.31* | *28.67* | *28.79* | *28.64^* |
| மொத்த கடன் வரவுகள் (*₹ கோடியில்*) | | 1,63,335 | 1,87,208 | 2,44,197 | 2,48,996 | 2,28,906 |
| மீள செலுத்தப்பட்ட கடனின் மொத்தம் (*₹ கோடியில்*) | | 1,21,117 | 1,32,202 | 1,49,143 | 1,57,125 | 1,47,982 |
| **அரசுக்கு கிடைத்த நிகர கடன் (*₹ கோடியில்*)** | | **42,218** | **55,006** | **95,054** | **91,871** | **80,924** |
| மீள செலுத்தப்பட்ட கடன் / கடன் வரவுகள் (*விழுக்காடு*) | | *74.15* | *70.62* | *61.07* | *63.10* | 64.65 |

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 14,336 கோடியை (2021–22 – ₹8,095.25 கோடி மற்றும் 2020–21 – ₹6,241 கோடி), நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹33,922 கோடியாக இருக்கும். இதனால் அரசுக்கு கிடைத்த நிகர கடன் ₹66,588 கோடியாக இருக்கும்.

^ பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட 2021–22 – ₹8,095 கோடி மற்றும் 2020–21 – ₹6,241 கோடியை குறியீடுகளை கணக்கிட கடன்களாக கருதப்படவில்லை.

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.17: 2022–23ல் நிலுவையிள்ள பொறுப்புகளின் கூறுகள்**




*பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹14,336 கோடியை (2021–22 – ₹8,095.25 கோடி மற்றும் 2020–21 – ₹6,241 கோடி), நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹33,922 கோடியாக இருக்கும். இதனால் அரசுக்கு கிடைத்த நிகர கடன் ₹66,588 கோடியாக இருக்கும்.*

(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2022-23*)

- 2021–22 இறுதியில் ₹5,02,205 கோடி ஆக இருந்த அரசின் உள்நாட்டு கடன் 13.03 விழுக்காடு உயர்ந்து 2022–23 இறுதியில் ₹5,67,635 கோடி ஆக உயர்ந்தது.


- மாநில அரசு 2022–23ல் ரிசர்வ் வங்கி மூலம் வெளி சந்தையிலிருந்து ₹21,500 கோடி பெற்றது. இத்தொகை, ஏற்கனவே இருந்த அரசு பத்திரங்களை மறு வெளியீடு செய்து பெற்றதால், அதில் ₹882.08 கோடி தள்ளுபடி செய்ய நேர்ந்தது.

- 2021–22ல் ₹6,10,667 கோடியாக இருந்த நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகள் 2022–23ல் ₹6,91,591 கோடியாக உயர்ந்தது. ஆனால் GSDPயின் விழுக்காட்டில் 2021–22ல் 28.79லிருந்து 2022–23ல் 28.64 ஆக குறைந்தது.

கடன் தொகையின் கூறுவாரியான போக்குகள், உள்நாட்டு கடன் வாங்கப்பட்டது மற்றும் மீள செலுத்தப்பட்டது என்பவற்றுக்கிடையேயான ஒப்பீடு ஆகியன **விளக்கப்படங்கள் 2.18** மற்றும் **2.19**ல் தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.18 கடன் கூறுகளின் போக்குகள்**

**(₹கோடியில்)**





| | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| சந்தை கடன்கள் | 32,278 | 49,826 | 76,796 | 72,500 | 68,003 |
| மத்திய அரசிடமிருந்து கடன்கள் | 1,157 | 633 | 9,515 | 12,290 | 8,528 |
| NSSFக்கு வெளியிடப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | -1,777 | -1,803 | -1,803 | -1,803 | -1,803 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களை | 1,215 | 252 | 2,130 | 1,761 | -770 |
| சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 2,450 | 2,365 | 2,877 | 2,680 | 1,851 |
| வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 10,635 | 8,123 | 16,437 | 10,714 | 12,416 |
| அநாமத்து மற்றும் பல்வகை | -3,037 | 5,682 | -6,981 | -43 | -120 |
| செலுத்தங்கள் | 207 | -3 | 0 | -6 | 4 |
| சேம நிதிகள் | 253 | 1,293 | 656 | 1,055 | 2,732 |
| எதிர்பாரா செலவு நிதி | 0 | 10 | 0 | 0 | 0 |
| ஒட்டுமொத்த பற்றாக்குறை | 43,381 | 66,378 | 99,627 | 99,148 | 90,841 |
| ரொக்க இருப்பில் கூடுதல்/குறைவு | -3,954 | 6,199 | 5,644 | 17,313 | 8,955 |
| மொத்த நிதிப் பற்றாக்குறை | 47,335 | 60,179 | 93,983 | 81,835 | 81,886 |

*குறிப்பு:* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட தொகை மாநில அரசின் ஆதாரங்களிலிருந்து செலுத்தப்படாது என்பதால், 2020–21 ₹6,241 கோடியும், 2021–22 மற்றும் 2022–23ல் ₹14,336 கோடியும் கணக்கில் எடுத்துக்கொள்ளாததால் மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹33,922 கோடியாக இருக்கும்.

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.19: வாங்கப்பட்ட மற்றும் திருப்பி செலுத்தப்பட்ட உள்நாட்டுக் கடன்**

(₹ *கோடியில்*)




(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

2018–19ல் ₹45,596 கோடியாக இருந்த உள்நாட்டு வரவுகள் 2022–23ல் ₹90,806 கோடியாக உயர்ந்தது மற்றும் உள்நாட்டு கடனை திருப்பிச் செலுத்தலும் அதே விகிதத்தில் ₹13,881 கோடியிலிருந்து ₹25,377 கோடியாக உயர்ந்தது.

### *2.6.1.1 வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை*

TNFR சட்டம் 2003ன் படி, மொத்த பொறுப்புகள் என்பது 'மாநில தொகு நிதி மற்றும் மாநில பொது கணக்குகளில் உள்ள பொறுப்புகள்' அடங்கும். எனினும், பல்வேறு மாநில திட்ட பணிகளுக்காக கழகங்கள்/முகமைகளால் வாங்கப்பட்டு, அசல் மற்றும் வட்டியை செலுத்தும் பொறுப்பை மாநில அரசு ஏற்றுள்ள கடன்கள் மாநிலத்தின் நிதி கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. இக்கடன்கள் மாநிலத்தின் பொறுப்புகளை மறைமுகமாக உயர்த்துகின்றன. அவ்வாறான கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.30ல்** தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 2.30: வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை**

(₹ *கோடியில்*)

| வரிசை எண் | முகமையின் பெயர் | 31 மார்ச் 2022 அன்று நிலுவை | நடப்பாண்டில் வரவு செலவு திட்டத்திற்கு அப்பால் பெறப்பட்ட கடன்கள் | நடப்பாண்டில் திருப்பிச் செலுத்திய கடன்கள் | 31 மார்ச் 2023 அன்று நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் | 373.03 | -- | 64.32 | 308.71 |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் – நீர் மற்றும் சுகாதார தொகுப்பு நிதி | 239.17 | 164.48 | 23.51 | 380.14 |
| 3 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 0.45 | -- | 0.45 | -- |
| 4 | தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் ஆறு மறுசீரமைப்பு | 629.31 | 1,020.21 | 39.83 | 1,609.69 |
| | **மொத்தம்** | **1,241.96** | **1,184.69** | **128.11** | **2,298.54** |

(*ஆதாரம்*: உரிய ஆண்டுக்கான வரவு – செலவு திட்ட ஆவணங்கள் மற்றும் நிதி கணக்குகள்)

வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களுக்கான அசல் மற்றும் வட்டி தொகைகள் வரவு செலவு திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டாலும், நிலுவையிலுள்ள வரவு – செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகளில் சேராது. 31 மார்ச் 2023 அன்று நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள் ₹6,91,591 கோடியாகும். இதில் 31 மார்ச் 2023 அன்றுள்ளவாறு வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் ₹2,298.54 கோடி உள்ளடங்காது. இந்த வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களை உள்ளடக்கினால், நிலுவையிலுள்ள பொறுப்புகள் ₹6,79,553.54 கோடியாக இருக்கும் மற்றும் கடன்கள் மற்றும் GSDPக்குமான விகிதம் 28.64 விழுக்காட்டிலிருந்து 28.73 விழுக்காடாக இருக்கும். அவை நிதி கணக்குகளில் காட்டப்படாததால், ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள அரசின் கடன்கள் பற்றிய விவரங்களில் வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை. எனவே, அரசின் நிதி பொறுப்புகள் பற்றிய உண்மை நிலையை கணக்கு பதிவுருக்களிலிருந்து அறிய இயலாது.

### *2.6.1.2 நிதிப் பற்றாக்குறையின் கூறுகளும் மற்றும் அதனை ஈடு செய்யப்பட்ட வழிகளும்*

நிதி பற்றாக்குறையின் கூறுகள் மற்றும் அது ஈடு செய்யப்பட்ட வழிகள் **அட்டவணை 2.31**ல் தரப்பட்டு மற்றும் நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான நிதிகள் அருவி வகையிலான **விளக்கப்படம் 2.20**ல் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.31: நிதி பற்றாக்குறையின் கூறுகள் மற்றம் அது ஈடு செய்யப்பட்ட வழிகள்**


(₹ *கோடியில்*)

| விவரங்கள் | | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|---|
| **நிதி பற்றாக்குறையின் கூறுகள்** | | **47,335** | **60,179** | **93,983** | **81,835** | **81,886** |
| 1 | வருவாய் பற்றாக்குறை | 23,459 | 35,909 | 62,326 | 46,538 | 36,215 |
| 2 | நிகர மூலதன வகை செலவு | 24,311 | 25,632 | 33,067 | 37,011 | 39,488 |
| 3 | நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | (–) 435 | (–) 1,362 | (–) 1,410 | (–) 1,714 | 6,183 |
| **நிதி பற்றாக்குறை ஈடு செய்யப்பட்ட வழிகள்** | | | | | | |
| 1 | சந்தை கடன்கள் | 32,278 | 49,826 | 76,796 | 72,500 | 68,003 |
| 2 | இந்திய அரசிடமிருந்து கடன்கள் | 1,157 | 633 | 9,515 | 12,290 | 8,528 |
| 3 | NSSFக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | (–) 1,777 | (–) 1,803 | (–) 1,803 | (–) 1,803 | (–) 1,803 |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் | 1,215 | 252 | 2,130 | 1,761 | (–)770 |
| 5 | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 2,450 | 2,365 | 2,877 | 2,680 | 1,851 |
| 6 | வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 10,635 | 8,123 | 16,437 | 10,714 | 12,416 |
| 7 | அநாமத்து மற்றும் பல்வகை | (–) 3,037 | 5,682 | (–) 6,981 | (–) 43 | (–) 120 |
| 8 | செலுத்தங்கள் | 207 | (–) 3 | –– | (–) 6 | 4 |
| 9 | சேம நிதிகள் | 253 | 1,293 | 656 | 1,055 | 2,732 |
| 10 | எதிர்பாரா செலவு நிதி | –– | 10 | –– | –– | –– |
| 11 | **ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **43,381** | **66,378** | **99,627** | **99,148** | **90,841** |
| 12 | ரொக்க இருப்பில் கூடுதல்/குறைவு | (–) 3,954 | 6,199 | 5,644 | 17,313 | 8,955 |
| 13 | **மொத்த நிதி பற்றாக்குறை** | **47,335** | **60,179** | **93,983** | **81,835** | **81,886** |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.20: நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்யப்பட்ட வழிகளும்**

**(₹ *கோடியில்*)**




(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

**நிதி பற்றாக்குறை ஈடு செய்யும் கூறுவாரியான வரவுகள் மற்றும் செலுத்தங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை 2.32 ல் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2.32: நிதி பற்றாக்குறையை ஈடு செய்யும் கூறுகளின் கீழ் வரவுகள் மற்றும் செலவுகள்**

**(₹ *கோடியில்*)**

| வ எண் | விவரங்கள் | வரவு | செலவு | நிகல தொகை |
|---|---|---|---|---|
| 1 | சந்தை கடன்கள் | 87,000 | 18,997 | 68,003 |
| 2 | இந்திய அரசிடமிருந்து கடன்கள் | 10,255 | 1,727 | 8,528 |
| 3 | NSSFக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | 0 | 1,803 | (–) 1,803 |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் | 3,806 | 4,576 | (–) 770 |
| 5 | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 9,177 | 7,326 | 1,851 |
| 6 | வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 98,511 | 86,095 | 12,416 |
| 7 | அநாமத்து மற்றும் பல்வகை | 3,66,528 | 3,66,648 | (–) 120 |
| 8 | செலுத்தங்கள் | 0 | (–) 4 | 4 |
| 9 | சேம நிதிகள் | 5,126 | 2,394 | 2,732 |
| 10 | எதிர்பாரா செலவு நிதி | –– | –– | –– |
| **11** | **மொத்த/ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **5,80,403** | **4,89,562** | **90,841** |
| 12 | ரொக்க இருப்பில் உயர்வு | 72,386 | 81,341 | 8,955 |
| **13** | **மொத்த நிதி பற்றாக்குறை** | **5,08,017** | **4,08,221** | **81,886** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

### 2.6.2 கடன் விவரங்கள்: முதிர்வு மற்றும் மீள செலுத்துதல்


**கடன் முதிர்வு மற்றும் மீள செலுத்துதல் என்பது, கடனை மீள செலுத்துவது அல்லது அதற்குரிய தொகைகளை செலுத்துவதற்கான அரசின் பொறுப்புடைமையை குறிக்கும். கடன் மற்றும் அதனை மீள செலுத்துவதற்கான காலம் குறித்த விவரங்கள் அட்டவணை 2.33 மற்றும் விளக்கப்படம் 2.21ல் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2.33: கடன் முதிர்வு பற்றிய நிலை**

| மீள செலுத்துவதற்கான காலம் (ஆண்டுகள்) | தொகை (₹ கோடியில்) | விழுக்காடு (பொது கடனில்) |
|---|---|---|
| 0–1 | 39,259 | *6.37* |
| >1 to 3 | 77,126 | *12.52* |
| >3 to 5 | 93,721 | *15.22* |
| >5 to 7 | 81,463 | *13.23* |
| > 7 | 2,60,675 | *42.33* |
| மற்றவை[7] | 63,649 | *10.33* |
| **மொத்தம்** | **6,15,893** | ***100.00*** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.21: சந்தை கடன்களை மீள செலுத்தும் நிரல்**




(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)


**அடுத்த பத்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் நிலுவையிலுள்ள சந்தை கடன்களின் விவரங்கள்** (2023–24 **ஆண்டிலிருந்து) அட்டவணை 2.34லும் மற்றும் விளக்கப்படம் 2.22லும் கொடுக்கப்பட்டுள்ளன.**

[7] *இத்தொகைக்கான செலுத்தல் விவரங்களை மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் பணிவரவுகள்) அவர்கள் பராமரிப்பதில்லை*

**அட்டவணை 2.34: திருப்பிச் செலுத்தப்படும் கடன்கள் மற்றும் வட்டி**

(**₹ *கோடியில்***)

| ஆண்டு | திருப்பிச் செலுத்தப்படும் | | |
|---|---|---|---|
| | சந்தை கடன்கள் | வட்டி | மொத்தம் |
| 2023–24 | 34,749.15 | 2,609.60 | 37,358.75 |
| 2024–25 | 31,450.00 | 2,544.79 | 33,994.79 |
| 2025–26 | 37,375.00 | 2,926.18 | 40,301.18 |
| 2026–27 | 40,610.00 | 3,069.34 | 43,679.34 |
| 2027–28 | 45,635.32 | 3,449.23 | 49,084.55 |
| 2028–29 | 40,905.50 | 3,320.89 | 44,226.39 |
| 2029–30 | 33,650.00 | 2,439.96 | 36,089.96 |
| 2030–31 | 46,977.00 | 3,163.33 | 50,140.33 |
| 2031–32 | 38,100.00 | 2,699.75 | 40,799.75 |
| 2032–33 | 26,500.00 | 2,040.60 | 28,540.60 |
| **மொத்தம்** | **3,75,951.97** | **28,263.67** | **4,04,215.64** |




(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2022-23*)

மாநிலத்தின் நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் வட்டியை அடுத்து பத்தாண்டுகளில் திருப்பிச் செலுத்துகைகளின் போக்கு மேற்கண்டவாறு ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. அடுத்த பத்தாண்டுகளில் மாநிலத்தின் வட்டி பொறுப்பு ₹28,263.67 கோடியாகவும், சந்தைகடன்கள் ₹3,75,951.97 கோடியாகவும் இருக்கும்.

## 2.7 கடன் தாங்கு தன்மை பற்றிய பகுப்பாய்வு

கடன் தொடர்பான தொகைகளை நடப்பாண்டு மற்றும் வரும் ஆண்டுகளில் செலுத்துவதற்குரிய அரசின் ஆற்றல் கடன் தாங்கு தன்மை எனப்படும். மேற்படி தன்மை, நடப்பு காலத்துடன் துவங்கும் ஒரு காலகட்டத்தில் கடன் தொடர்பான நிதி பொறுப்புகளை ஏற்கக்கூடிய சாத்தியக்கூற்றை கணக்கில் கொள்கிறது. அது பொருளாதாரத்தின் நிதி நிலையையை மதிப்பிடுவதற்கு ஒரு முக்கிய காரணி ஆகும். உயர் அளவிலான கடன் நிலை பெரும்

**எண்ணிக்கையிலான இடர்களை உருவாக்கும். உயர் அளவிலான கடன் நிலை பொதுவாக, அதிக அளவில் கடன் வாங்கும் தேவைகளுடனும், அதன் காரணத்தால் கடன் பெற இயலாத நிலையுடனும் (கடன் வாங்கும் தேவைகளை நிறைவு செய்ய இயலாமை அல்லது உயர் வட்டி விகிதங்களில் வாங்குவது) தொடர்பு கொண்டது ஆகும்.**

**டோமர் அணுகுமுறை மற்றும் பெரிய அளவிலான நிதி அளவுருக்களை அந்தந்த FRBM உட்படுத்தி நிதி மற்றும் கடன் அளவுருக்களை அடிப்படையாக கொண்டு கடன் தாங்கும் தன்மை பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த பகுப்பாய்வின்முடிவுகள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன:**

**(A) கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளில்** 2018–19 **முதல்** 2022–23 **வரையிலான காலகட்டத்தில் இருந்த போக்குகள் அட்டவணை 2.35** மற்றும் **விளக்கப்படம் 2.23**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.35: கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளின் போக்குகள்**

| கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகள் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|
| நிலுவையில் உள்ள பொது கடன்* (₹*கோடியில்*) | 3,21,642 | 3,70,550 | 4,50,947 | 5,27,600 | 6,01,557 |
| நிலுவையில் உள்ள பொது கடன் தொகையின் வளர்ச்சி விகிதம் (*விழுக்காடு*) | *11.38* | *15.21* | *21.70* | *17.00* | *14.02* |
| GSDP (₹*கோடியில்* ) | 16,30,209 | 17,43,144 | 17,88,074 | 20,71,286 | 23,64,514 |
| GSDP வளர்ச்சி விகிதம் (*விழுக்காடு*) | *11.27* | *6.93* | *2.58* | *15.84* | *14.16* |
| பொதுக்கடன் */GSDP (விழுக்காடு) | *19.73* | *21.26* | *25.22* | *25.47* | *25.44* |
| நிலுவையிலுள்ள பொது கடனுக்கான சராசரி வட்டிவிகிதம் (*விழுக்காடு)* ^ | *7.97* | *7.71* | *7.54* | *7.26* | *7.12* |
| பொதுக்கடன் மீதான வட்டி கொடுப்புகள் (₹*கோடியில்*) | 24,310 | 26,690 | 30,983 | 35,521 | 40,182 |
| வட்டிகொடுப்புகள் இல்லாமல் வருவாய் பற்றாக்குறை (–) / மிகை (+) (₹*கோடியில்*) | 851 | (-) 9,219 | (-) 31,343 | (-) 11,017 | 3,967 |
| வட்டி கொடுப்புகள் உள்பட வருவாய் பற்றாக்குறை (–) (₹ *கோடியில்*) | (-) 23,459 | (-) 35,909 | (-) 62,326 | (-) 46,538 | (-) 36,215 |
| வருவாய் வகை வரவினத்தில் வட்டி கொடுப்புகளின் பங்கு | *13.99* | *15.29* | *17.80* | *17.12* | *16.48* |
| கடன் வரவுகளில் கடன் செலுத்துகைகளின் விழுக்காடு | *31.43* | *26.76* | *15.78* | *18.89* | *26.82* |
| அரசு கிடைத்த நிகர கடன் #(₹ *கோடியில்*) | 8,562 | 22,218 | 49,414 | 41,132 | 33,775 |
| கடன் வரவுகளில் நிகர கடனின் விழுக்காடு** | *17.86* | *33.27* | *51.14* | *42.67* | *33.42* |
| முதனிலை பற்றாக்குறை | *18,578* | *28,199* | *57,486* | *40,271* | *34,975* |
| கடன் நிலைப்படுத்துதல் (குயப்பரவல்$ + முதன்மை பற்றாக்குறை) (₹ *கோடியில்*) | (-) 7,964 | (-) 31,089 | (-) 79,853 | 4,997 | 7,375 |

*பெருந்தலைப்பு 6003 – உள்நாட்டு கடன் மற்றும் 6004– மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களும் முன்பணங்களும் சேர்ந்த மொத்தம் தான் நிலுவையிலுள்ள பொதுக்கடன் ஆகும். இதில் 2020–21ல் பெறப்பட்ட ₹6,241 கோடியும். 2021–22ல் பெறப்பட்ட ₹8,095 கோடி உள்ளடக்கப்படவில்லை.

# 'பொதுக்கடன் வரவுகளிலிருந்து பொதுக்கடன் திருப்பிச் செலுத்துகை மற்றும் பொதுக்கடனுக்கான வட்டியை கழித்து கணக்கிடப்படுகிறது. இதில் பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட கடன்கள் உள்ளடக்கப்படவில்லை.


*** கடன் வரவுகளில் 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளில்* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக வழங்கப்பட்ட கடன்கள் உள்ளடக்கப்படவில்லை

*$ குயப்பரவல் = கடன் X (GSDP வளர்ச்சி வீதம் – வட்டி வீதம்)*/100

^ நிலுவையிலுள்ள பொதுக்கடனுக்கான சராசரி வட்டிவிகிதம் = {பெறப்பட்ட வட்டி [(கடன்கள் மற்றும் முன்பணங்களின் ஆரம்ப இருப்பு + இறுதி இருப்பு)/2] x 100}

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.23: கடன் தாங்கு நிலைக்கான குறியீட்டுகளின் போக்குகள்**




(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் 2020–21ல் கடனாக வழங்கப்பட்ட ₹6,241 கோடி மற்றும் 2021–22ல் வழங்கப்பட்ட₹8,095 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகள் ₹6,01,557 கோடியாக இருக்கும். நிலுவையிலுள்ள பொது கடன்களுக்கும் GSDPக்குமான விகிதம் *25.44* விழுக்காடாக இருக்கும்.

- கடனுக்கும் GSDPக்கும் ஆன விகிதம் நிலையானதாகவோ அல்லது காலப்போக்கில் குறைந்து வருவதாகவோ உள்ள நிதி கொள்கை தொடர்ந்து பின்பற்றத்தக்க கொள்கையாக கருதப்படும். எனினும், மேற்கண்டவற்றில் இருந்து, கடந்த வருடம் வரை உயர்வாகவே இருந்தது. இந்த வருடம் அது கணிசமாக குறைந்து உள்ளதை காணலாம். இது கடன்கள் உயர் அளவுகளில் உள்ளதை காட்டும் மற்றும் உயர் அளவிலான பற்றாக்குறைகளுக்கு வழி வகுக்கும்.

- வருவாய் வகை வரவுகளுக்கு செலுத்தப்படும் வட்டிக்கும் இடையேயான விகிதம் கணிசமான குறைந்து 16.48 விழுக்காடாக இருந்தது. கடனாக பெறப்படும் தொகையில் கணிசமான பகுதி கடன்களை மீள செலுத்தவும் அவற்றின் மீதான வட்டியை செலுத்தவும் பயன்படுத்தப்பட்டால், வளர்ச்சி பணிகளுக்காக அரசுக்கு கிட்டும் நிகர தொகை குறையும்.

**(B)** டோமர்[8] (டோமர் 1944) மாதிரியை அடிப்படையாக கொண்டு கடன் தாங்கு நிலையை பகுப்பாய்வு செய்யப்பட்டது. டோமர் மாதிரியின் படி, அரசு கடன்தாங்கு நிலையை உறுதி செய்ய, அரசு கடன்களுக்கான வட்டிவீதம் GDP வளர்ச்சி வீதத்தை விட அதிகமாக இருக்க கூடாது.

பொதுகடனின் முக்கிய ஆற்றல் மிக்க கூறுகளான வட்டி வீதம், GSDPன் வளர்ச்சி வீதம் மற்றும் முதன்மை வரவு செலவுத் திட்ட இருப்பு ஆகியவை பின்வருமாறு.

| g-r (g – உள்ளபடியான வளர்ச்சி வீதம்: r – உள்ளபடியான வட்டி வீதம்) | s < 0 (முதன்மை பற்றாக்குறை) | s > 0 (முதன்மை மிகை) |
|---|---|---|
| g – r > 0 (வலுவான பொருளாதார வளர்ச்சி growth) | GSDPல் பொதுகடனின் விழுக்காடு பூஜ்ஜியத்தை விட கூடுதலாக நிலையான நிலைக்கு மாற வேண்டும் | GSDPல் பொதுகடனின் விழுக்காடு பூஜ்ஜியத்தை விட குறைவாகி நிலையான நிலைக்கு சென்று பொது சேமிப்பிற்கு வழிவகுக்கும் |
| g – r < 0 (மந்தமான பொருளாதார வளர்ச்சி) | GSDPல் பொதுகடனின் விழுக்காடு' நிலையாக நிலைக்கு மாறாமல் காலவரையின்றி அதிகரிக்க வேண்டும் | தீர்மானிக்க முடியாத சூழல் |

தமிழ்நாட்டில் மேற்சொன்ன அலகுகளை பயன்படுத்தியதன் விளைவுகளை அட்டவணை 2.36ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.36: டோமர் மாதிரியை அடிப்படையாக கொண்ட கடன் தாங்கு நிலை**

| ஆண்டு | உள்ளபடியான வளர்ச்சி வீதம் (g) | உள்ளபடியான வட்டி (r) | g – r (டோமர் இடைவெளி) | முதன்மை பற்றாக்குறைDeficit (–)/ மிகை (+) (₹ கோடியில்) | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|
| 2018-19 | 7.01 | 4.59 | 2.41 | (-) 18,578 | GSDPல் பொதுகடனின் விழுக்காடு பூஜ்ஜியத்தை விட கூடுதலாக நிலையான நிலைக்கு மாற வேண்டும் |
| 2019-20 | 3.25 | 2.37 | 0.88 | (-) 28,199 | |
| 2020-21 | 0.07 | 0.98 | (-) 0.91 | (-) 57,486 | GSDPல் பொதுகடனின் விழுக்காடு' நிலையாக நிலைக்கு மாறாமல் காலவரையின்றி அதிகரிக்க வேண்டும் |
| 2021-22 | 7.92 | 1.82 | 6.10 | (-) 40,271 | GSDPல் பொதுகடனின் விழுக்காடு பூஜ்ஜியத்தை விட கூடுதலாக நிலையான நிலைக்கு மாற வேண்டும் |
| 2022-23 | 8.19 | 1.42 | 6.77 | (-) 34,975 | |

*குறிப்பு: நிலையான விலையில் GSDPக்காக கணக்கிடப்படும் உண்மையான வளர்ச்சி விகிதம்.*
*உண்மையான வட்டி விகிதம் என்பது தமிழ் நாட்டில் பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட சராசரி வட்டி விகிதமாகும்.*

---

[8] கடன்களின் கடன் முதிர்வு, உள்ளடக்கம், செலவு மற்றும் இடர்களுக்கான கூறுகளை டோமர் மாதிரியில் கணக்கில் கொள்ளவில்லை

டோமர் பகுப்பாய்வில், 2020-21 தவிர, 2018-19 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் டோமர் இடைவெளி (g-r) உயர்ந்து வரும் போக்கில் இருந்தது என்பதைக் காட்டுகிறது. கோவிட் நோய்க்கு முந்தைய காலகட்டத்தில் அதாவது 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில், GSDPயின் உண்மையான வளர்ச்சி விகிதம் முறையே 7.01 சதவீதம் மற்றும் 3.25 சதவீதமாக இருந்தது மற்றும் டோமர் இடைவெளி (g-r என வெளிப்படுத்துவது) உயர்ந் வரும் போக்கில் இருந்தது, ஆனால் மாநிலத்தில் முதன்மை பற்றாக்குறை இருந்தது. . கோவிட்-19, 2020-21 ஆம் ஆண்டில் GSDPயின் உண்மையான வளர்ச்சி விகிதத்தை பாதித்தது மற்றும் அந்த ஆண்டில் டோமர் இடைவெளி எதிர்மறையாக மாறியது. அடுத்தடுத்த ஆண்டுகளில் (2021-22 மற்றும் 2022-23), முதன்மைப் பற்றாக்குறையுடன் டோமர் இடைவெளி உயர்ந்து வரும் போக்கில் இருந்தது, இது GSDP இன் சதவீதமாக பொதுக் கடன் ஒரு நிலையான மதிப்பை நோக்கிச் செல்கிறது, எனவே நிலையானது. கடனின் கையிருப்பைப் பொறுத்து, பூஜ்ஜியத்தை விட நிலையான நிலையை அடையும் போது அது அதிகரிக்கும் அல்லது குறையும்.

பொதுக் கடனின் நிலைத்தன்மை, உண்மையான வட்டி விகிதத்தைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டு, நீண்ட காலத்திற்கு உண்மையான வளர்ச்சி விகிதத்தை மாநிலப் பொருளாதாரம் பராமரிக்கிறதா என்பதைப் பொறுத்தே அமையும் என்பதைக் குறிப்பிடலாம்.

### 2.7.1 வாங்கப்பட்ட கடன்களின் பயன்பாடு

கடனாக வாங்கப்பட்ட நிதி முக்கியமாக ஒரு சிறந்த நிலையில் மூலதன உருவாக்கம் மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். கடனாக வாங்கப்பட்ட நிதியை நடப்பு கால செலவுகளுக்கும் நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டியை செலுத்துவதற்கும் பயன்படுத்துவது என்பது நிலைத்திருக்கக்கூடியது அல்ல.

2018–19 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில், கடனான வாங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படுவதில் இருந்த போக்குகள் அட்டவணை **2.37** மற்றும் விளக்கப்படம்**2.24**ல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.37: கடனாக வாங்கப்பட்ட நிதியின் பயன்பாடு**

(₹ *கோடியில்*)

| ஆண்டு | | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|---|---|
| கடனாக பெறப்பட்ட மொத்த தொகை(பொது கடன்) | A | 47,936 | 66,774 | 1,02,867 | 1,04,485 | 1,01,062 |
| முந்தைய கடன் மீள செலுத்தப்பட்டது (அசல்) (விழுக்காடு) | B | 15,064<br>*(31.43)* | 17,866<br>*(26.75)* | 16,229<br>*(15.78)* | 19,737<br>*(18.89)* | 27,104<br>*(26.82)* |
| நிகர மூலதன வகை செலவு (விழுக்காடு) | C | 24,311<br>*(50.72)* | 25,632<br>*(38.39)* | 33,067<br>*(32.14)* | 37,011<br>*(35.42)* | 39,488<br>*(39.07)* |
| நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | D | 435<br>*(0.90)* | 1,362<br>*(2.04)* | 1,410<br>*(1.37)* | 1,714<br>*(1.64)* | (–) 6,183<br>*((–) 6.12)* |
| நிகர கடன் தொகையில் வருவாய் வகை செலவு மேற்கொள்ளப்பட்ட அளவு (விழுக்காட்டில்) | E = A-B-C-D | 8,126<br>*(16.95)* | 21,914<br>*(32.82)* | 52,161<br>*(50.71)* | 46,023<br>*(44.05)* | 40,653<br>*(40.23)* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)


- கடன் தொகையிலிருந்து 40.23 விழுக்காடு வருவாய் வகை செலவினத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

- வருவாய் வகை வரவுகளின் உயர்வு (17.47 விழுக்காடு) காரணமாக கடன்கள் 3.28 விழுக்காடு குறைந்தது.

வருவாய் பற்றாக்குறையை குறைப்பதற்கும் மற்றும் அதனை முழுமையாக நீக்குவதற்கும் மற்றும் அனைத்து கடன்களையும் மூலதன செலவிற்கு பயன்படுத்தவும், நிதிக் குழுவின் பரிந்துரையின் படி, மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு வருவாய் பற்றாக்குறை மானியமாக 2021–22ல் ₹3,010 கோடியும், 2022–23ல் ₹801 கோடியும் பெற்றிருந்தது.

TNFR சட்டத்தின்படி 2023–24க்குள் வருவாய் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும். 2021–22லிருந்து வருவாய் பற்றாக்குறை குறைந்து வந்த போதிலும், 2023–24ல் முழுமையாக வருவாய் பற்றாக்குறையை நீக்குவது என்ற TNFR சட்டத்தின் இலக்கை அடைய முடியாமல் போகலாம்.

**விளக்கப்படம் 2.24: கடனாக வாங்கப்பட்ட நிதியின் பயன்பாடு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### 2.7.2 உத்தரவாதங்களின் நிலை – எதிர்பாரா பொறுப்புகள்

அரசு உத்தரவாதம் அளித்ததன் அடிப்படையில் கடனை பெற்றவர் அக்கடனை மீள செலுத்த தவறும் நிலையில் அரசு அத்தொகையை செலுத்த வேண்டிய எதிப்பாரா பொறுப்புகள் மாநில தொகுநிதிக்கு உண்டு. உத்தரவாதங்கள் தொடர்பான அதிகபட்ச அளவை விதிக்கும் சட்டங்கள் அல்லது உத்தரவாதங்களை மாநில அரசுகள் பிறப்பித்துள்ளன.


இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 293ன் படி, மாநில அரசுகள் உத்தரவாதங்களை அளிப்பதற்கான வரையறைகளை மாநில சட்டமன்றங்கள் விதிக்க வேண்டும். நிலுவையில் இருக்கக்கூடிய மொத்த உத்தரவாதங்களுக்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வகை வரவுகளின் 100 விழுக்காடு மற்றும் GSDPன் 10 விழுக்காடு என்பனவற்றுள் எது சிறியதோ அதனை அதிகபட்ச அளவாகவும், நிதி சுமை அடிப்படையிலான உத்தரவாதங்களுக்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வகை வரவுகளின் 75 விழுக்காடு மற்றும் GSDPன் 7.5 விழுக்காடு என்பனவற்றுள் எது சிறியதோ அதனை அதிகபட்ச அளவாகவும், தமிழ்நாடு நிதி பொறுப்புடைமை சட்டம் 2003 விதித்துள்ளது.

மார்ச் 31, 2023 நிலையில் நிலுவையில் இருந்த மாநில அரசின் மொத்த உத்தரவாதங்கள் ₹90,709.22 கோடி ஆகும். இது 2021–22ன் மொத்த வருவாய் வகை வரவுகளில் (₹2,07,492.40 கோடி) 43.72 விழுக்காடு மற்றும் GSDPல் (₹23,64,514 கோடி, தற்போதைய விலைவிகிதங்களில்) 3.84 விழுக்காடு ஆகும். அரசு அளித்த உத்தரவாதம் எதுவும் நடப்பாண்டில் பயன்படுத்தப்படவில்லை. அரசு அளித்த உத்தரவாத கட்டணமாக பெறக்கூடிய தொகை ₹1,762.81 கோடி என மதிப்பிடப்பட்டதற்கு எதிராக, அரசு உள்ளபடியே ஈட்டியது ₹968.37 கோடி ஆகும். இவ்வாறாக, உத்தரவாத கட்டணம் ஈட்டுவதில் ₹794.44 கோடி குறைவு இருந்தது.

2018–19 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் இருந்த அரசின் உத்தரவாதங்கள், வட்டி உட்பட, பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.25ல்** தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.25: மாநில அரசால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்**

(₹ *கோடியில்*)




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

### 2.7.3 ரொக்க இருப்பு மேலாண்மை

ரிசர்வ் வங்கியுடனான ஒப்பந்தத்தின்படி, மாநில அரசு ஒவ்வொரு நாளும் ₹3.25 கோடி குறைந்தபட்ச ரொக்கத்தை வங்கியுடனான கணக்கில்

வைத்திருக்க வேண்டும். ஏதாவதொரு நாளில் மீத தொகை இத்ந குறைந்தபட்ச அளவைவிட குறைந்தால், அப்பற்றாக்குறையை அவ்வப்போது சாதாரன வழிவகை முன்பணங்கள்/சிறப்பு வழிவகை முன்பணங்கள்/மிகைப்பற்று பெறுவதன் மூலம் சரி செய்யலாம். அரசு பெறக்கூடிய சாதாரண வழிவகை முன்பணங்களுக்கான வரம்பு 31 மார்ச் 2022 முதல் ₹3,601 கோடி ஆகும். சிறப்பு வழிவகை முன்பணங்களுக்கான வரம்பை வங்கி அவ்வப்போது திருத்தி அமைக்கும். மாநில அரசு தனது உபரி ரொக்க மீதத்தை குறுகிய மற்றும் நீண்டகால இந்திய அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்கிறது. அத்தகைய முதலீடுகளிலிருந்து ஈட்டப்படும் ஆதாயங்கள் '0049– வட்டி வரவுகள்' என்ற தலைப்பிக் கீழ் வரவுகளாக வரவு வைக்கப்படும். ரொக்க மீதங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கடன்தீர் நிதி மற்றும் உத்தரவாத மீட்பு நிதி ஆகியவற்றிலும் முதலீடு செய்யப்படும்.

மாநில அரசு 2022–23ல் மேற்குறிப்பிட்ட அளவிலான குறைந்தபட்ச தினசரி ரொக்க மீதத்தை ரிசர்வ் வங்கியில் வைத்திருந்தது. சாதாரண மற்றும் சிறப்பு வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப்பற்று தொகைகள் எதையும் பெறவில்லை.

2022–23 ஆண்டில் இருந்த ரொக்க மீதம் மற்றும் அதன் முதலீடுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.38ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.38: ரொக்க மீதங்கள் மற்றும் அதன் முதலீடுகள்**

*(₹ கோடியில்)*

| | 1 ஏப்ர்ல் 2022 அன்று துவக்க இருப்பு | 31 மார்ச் 2023 அன்று இறுதி இருப்பு |
|---|---|---|
| **A. பொதுவான ரொக்க மீதம்** | | |
| கருவூலங்களில் ரொக்கம் | -- | -- |
| ரிசர்வ் வங்கியில் வைப்பு | 266.95 | (–) 59.17 |
| பிற வங்கிகளில் வைப்பு | -- | -- |
| இறுதி செய்யப்படாத செலுத்தங்கள் – உள்ளூர் | 16.80 | 16.80 |
| **மொத்தம்** | **283.75** | **(–) 42.37** |
| ரொக்க மீத முதலீடுகள் கணக்கில் உள்ள முதலீடுகள் | 14,875.95 | 14,123.55 |
| **மொத்தம்(அ)** | **15,159.70** | **14,081.18** |
| **B. பிற ரொக்க மீதங்கள் மற்றும் முதலீடுகள்** | | |
| பொதுப்பணி, வனத்துறைகளின் அலுவலர்களிடம் இருந்த ரொக்கம் | 4.16 | 4.16 |
| எதிர்பாரா செலவுகளுக்காக துறை அலுவலர்களிடம் இருந்த நிலையான முன்பணம் | 7.59 | 7.35 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்கான நிதிகளில் முதலீடு | 57,214.65 | 67,248.03 |
| **மொத்தம்(ஆ)** | **57,226.40** | **67,259.54** |
| **மொத்தம்(அ +ஆ)** | **72,386.10** | **81,340.72** |
| **ஈட்டப்பட்ட வட்டி** | **3,917.94** | **4,747.10** |

(*ஆதாரம்:நிதி கணக்குகள்*)

மாநில அரசின் ஆண்டு இறுதி ரொக்க மீதங்கள் (மற்றும் அதன் முதலீடுகள்) 2021–22ல் ₹72,386 கோடி என்ற அளவிலிருந்து 2022–23 ₹81,341 கோடி என்ற அளவிற்கு ₹8,955 கோடி உயர்வு கண்டன.

இந்திய அரசு பத்திரங்கள் மற்றும் அரசு கடன் பத்திரங்களில் செய்யப்பட்டிருந்த முதலீடுகளிலிருந்து மாநில அரசு 2022–23ல் ₹130 கோடி வட்டி ஈட்டியது. ஆண்டின் இறுதியில் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான நிதிகளில் செய்யப்பட்டிருந்த ₹67,248 கோடி முதலீடுகளுள் ₹8,320.93 கோடி ஒருங்கிணைக்கப்பட்ட கடன் தீர் நிதியிலும், ₹2,138.74 கோடி உத்தரவாத மீட்பு நிதியிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடான ₹3,94,255.72 கோடியை, அதாவது செலவு செய்யாத (சேமிப்பு) ஒதுக்கீடான ₹35,089.39 கோடியை சேர்த்து முழுவதுமாக செலவு செய்திருந்தால் பொதுவான ரொக்க மீதம் எதிர்மறையாக இருந்திருக்கும்.

2018–19 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில் அரசின் ரொக்க மீத முதலீடு கணக்கின் போக்கு **அட்டவணை 2.39**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.39: ரொக்க மீத முதலீடு கணக்கு ( பெருந்தலைப்பு –8673)**

*(₹கோடியில்)*


| ஆண்டு | துவக்க இருப்பு | இறுதி இருப்பு | உயர்வு (+) / குறைவு (–) | ஈட்டிய வட்டி |
|---|---|---|---|---|
| 2018-19 | 18,585.03 | 11,008.09 | (-) 7,576.94 | 729.20 |
| 2019-20 | 11,008.09 | 10,141.94 | (-) 866.15 | 300.72 |
| 2020-21 | 10,141.94 | 5,622.30 | (-) 4,519.64 | 214.51 |
| 2021-22 | 5,622.30 | 14,875.95 | 9,253.65 | 120.58 |
| 2022-23 | 14,875.95 | 14,123.55 | (-) 752.40 | 130.32 |

*(ஆதாரம்:உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

2018–19ல் ₹11,008 கோடியாக இருந்த முதலீடு குறைந்து வரும் போக்கிலிருந்து 2020–21ல் ₹5,622 கோடியாக இருந்து, மார்ச் 2023ல் ₹14,124 கோடியாக பெருமளவு உயர்ந்தது என்பது மாநில அரசின் ரொக்க மீத முதலீடுகளின் போக்கை பகுப்பாய்வு செய்ததில் தெரிய வந்தது. நிலுவையிலுள்ள பொது கடன்களுக்கு அரசு 7.12 விழுக்காடு வட்டியை சராசரியாக செலுத்தி வந்தது.

2018-23 காலகட்டத்தில் ரொக்க மீத முதலீடு கணக்கில் இருந்த மீதங்களையும் அரசு வாங்கிய சந்தை கடன்களையும் **விளக்கப்படம் 2.26** ஒப்பிடுகிறது. சந்தை கடன்கள் அதிக வட்டி விகிதங்களில் வாங்கப்பட்டன. ஆனால், அரசு கடன் பத்திரங்கள் மூலம் குறைவான விகித வட்டியை கிடைக்கப்பெற்றது.

**விளக்கப்படம் 2.26: சந்தை கடன்கள் மற்றும் ரொக்க மீத முதலீடுகள்**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

நேர்மறை நிகர ரொக்க இருப்பு முதலீடு என்பது அந்தந்த மாதங்களில் அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதை குறிக்கும் (கணக்கு பெருந்தலைப்பு 8673) மற்றும் எதிர்மறை நிகர ரொக்க இருப்பு முதலீடு என்பது அந்தந்த மாதங்களில் கடன் பத்திரங்கள் முதிர்வுற்றாலோ அல்லது தள்ளுபடி செய்தாலோ அரசு கணக்கில் திரும்ப வரவு வைக்கப்படும்.

பொது ரொக்க இருப்பான ₹14,081 கோடியில் ரொக்க மீத முதலீடான ₹14,124 கோடியும், ரிசர்வ் வங்கியின் வைப்புத் தொகை மற்றும் இறுதி செய்யப்படாத செலுத்தங்கள் (–) ₹43 கோடியும் அடங்கியுள்ளது.

## 2.8 முடிவுரை

**மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்:**

**சொந்த வரி வருவாய்:** சொந்த வரி வருவாயின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 2022–23ல் 22.27 விழுக்காடாக இருந்தது.

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2022–23ல் அதன் GSDPல் 6.35 விழுக்காடு ஆகும்.

**வரியில்லாத வருவாய்:** மாநிலத்தின் வரியல்லாத வருவாய் 2022–23ல் முந்தைய ஆண்டைவிட ₹4,944 கோடி (40.80) விழு காடு உயர்ந்தது.

**நிதி சேகரிப்பில் மாநிலத்தின் செயல்பாடு:** நடப்பாண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை விட குறைவாக இருந்தது ஆனால் 15வது நிதிக்குழு மதிப்பீட்டை விட அதிகமாக இருந்தது. வரியல்லாத வருவாய் 15வது நிதிக்குழு மதிப்பீட்டைவிட குறைவாக இருந்தது ஆனால் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட கூடுதலாக இருந்தது.

*(பத்திகள் 2.3.2 மற்றும் 2.3.4)*

**வருவாய் வகை செலவு :** 2022–23ல், வருவாய் வகை செலவு முந்தைய ஆண்டைவிட ₹25,934.06 கோடி (10.21 விழுக்காடு) அளவு உயர்ந்தது. இந்த உயர்வு கடந்தாண்டில் 7.46 விழுக்காடு ஆகும். 2021–22ல் GSDPல் 12.26 விழுக்காடாக இருந்த வருவாய் வகை செலவினம் 2022–23ல் 11.84 விழுக்காடாக குறைந்தது. GST இழப்பை பகிர்ந்து கொடுக்காததால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ₹461.26 கோடி குறைவாக பகிரப்பட்டிருந்தது.

**மூலதன வகை சேலவு** நடப்பாண்டில் 6.81 விழுக்காடு உயர்ந்தது. மொத்த செலவினத்தில், மூலதன செலவு 0.46 விழுக்காடு குறைந்தது.

*(பத்திகள் 2.4.1 மற்றும் 2.4.3)*

## 2.9. பரிந்துரை

(i) கடனை சார்ந்திருப்பதை குறைக்கும் வகையில் மாநில அரசு ஆதாரங்களை திரட்ட வேண்டும்.

(ii) உயர்ந்து வரும் போக்கிலுள்ள தவிர்க்க இயலாத செலவினமான சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்தங்கள் மீது மாநில அரசு அதிகபட்ச கவனம் செலுத்த வேண்டும்.